பக்கங்கள்: 12

# தீம்புனல்
THEEMPUNAL
வாராந்தப் பத்திரிகை

தீ : 03 புனல்:39 20.01.2024 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2054



சர்வதேச நீதிமன்ற விவகாரம் நுட்பமாக கையாளும் இலங்கை

பக்கம் 05



அயோத்தி இராமர் கோவில் சொல்லும் செய்தி என்ன?

நியூசிலாந்து சிற்சபேசன்

பக்கம் 06

# தமிழரசுக் கட்சி தலைமைக்கு மும்முனைப் போட்டி

✍ வர்மா

இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்வுடன் ஒன்றிணைந்த தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்கு வாக்கெடுப்பு நடைபெற உள்ளது. தமிழ் அரசுக் கட்சியின் வரலாற்றில் இது ஒரு புதிய அத்தியாயமாகும். தமிழரசுக் கட்சியின் தேர்தலில் அதிகாரபூர்வமாக மூன்று வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சுமந்திரன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகிய மூவரும் போட்டியில் உள்ளார்.

மூவர் போட்டியில் இருந்தாலும் சுமந்திரன், சிறீதரன் ஆகிய இருவருக்குமிடையேதான் உண்மையான போட்டி நிலவுகிறது. யோகேஸ்வரன் சிறீதரனுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளார்.

தமிழ் அரசுக் கட்சிக்குள் சுமந்திரனின் ஆதரவாளர்களும் சிறீதரனின் ஆதரவாளர்களும் இருக்கின்றனர். ஒரே கட்சி என்றாலும் இருவரின் அரசியல் பயணப் பாதை வேறு வேறானது. வெளிநாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்களும் அணி பிரிந்து நிற்கிறார்கள். ஒரு நாட்டில் நடைபெறும் தேர்தல் போன்றே சுமந்திரனும், சிறீதரனும் பிரச்சாரம் செய்தார்கள்,







இதுவரை காலமும் தமிழ் அரசுக் கட்சியில் தலைவர் ஏக மனதாக தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒருமித்த கருத்தை எட்டும்படி மூவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ஒரே இடத்தில் மூவரும் பேசிப் பார்த்தும் ஒரு முடிவுக்கு வரவில்லை. நாளை ஞாயிற்றுக்கிழமை தலைவர் தெரிவு திருகோணமலையில் நடைபெற உள்ளது.

ஒரு கட்சியில் தலைவரை அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் தான் தெரிவு செய்ய வேண்டும். தமிழ் அரசுக் கட்சியில் அங்கத்தவர் அல்லாதவரும் யார் தலைவராக வர வேண்டும் என கருத்துச் சொல்கிறார்கள்.

தமிழரசுக் கட்சிக்கான தலைவர் 1952 ஆம் ஆண்டின் முதலாவது தேசிய மாநாட்டில் தேர்வு செய்யப்பட்டமை முதல் இப்போது கட்சியில் தலைவருக்காக முன்மொழியப்படுபவர்கள் வரையில் ஒருவர் தலைவராக தேர்வு செய்யப்படுவார். எதிர்வரும் ஜனவரி மாதம் 27 ஆம் 28 ஆம் திகதிகளில் கட்சியின் 17 ஆவது தேசிய மாநாடு இடம்பெறவுள்ளது.

இதற்கு முன்னர் இடம்பெற்ற 16 மாநாடுகளிலும் தலைவர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டாலும் செயலாளர் பதவிக்கு மட்டும் இரு தடவை போட்டிநிலை ஏற்படுவதற்கான ஏதுநிலைகள் உருவாகி அது கட்சியின் மூத்த தலைவர்களின் தலையீட்டால் கைவிடப்பட்ட வரலாறும் உண்டு.

கட்சியின் தலைவராக ஒருவரது பெயர் மட்டும் முன்மொழியப்பட்டால் அவரையும் அல்லது ஒன்றிற்கும் மேற்பட்டவர்கள் முன்மொழியப்பட்டால் பொதுச் சபை உறுப்பினர்கள் இரகசிய வாக்களித்து தேர்வு செய்யப்படுவார் என 63 வருடங்களின் முன்னர் அதாவது 1961 ஆம் ஆண்டு எழுதப்பட்ட தமிழரசுக் கட்சியின் யாப்பிலேயே சொல்லப்பட்ட ஓர் விடயமாகும்.

இதற்கமைய இடம்பெறவுள்ள தமிழரசுக் கட்சியின் 17 ஆவது தேசிய மாநாட்டில் தெரிவு செய்யப்படவேண்டிய தலைவருக்காக மூவரின் பெயர்கள் இப்போது பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதற்கு பொதுச் சபை உறுப்பினர்கள் வாக்களித்தே தமது கட்சிக்கான தலைவரை தேர்வு செய்யவுள்ளனர்.

தமிழரசுக் கட்சிக்கு 1966 இல் உடுவிலில் இடம்பெற்ற மாநாட்டின் போது க.பொ.இரத்தினம் செயலாளராக வர விரும்பி அந்த முயற்சியில் ஈடுபட்டார். அப்போது தந்தை செல்வாவின் தலையீட்டினால் அமிர்தலிங்கம் செயலாளரானார்.

இம் முறை தலைவர் தேர்விற்கு மொத்தம் 343 பேர் மட்டுமே தகுதி உடையவர்களாகவே காணப்படுகின்றனர்.

17 ஆவது தேசிய மாநாடு ஆரம்பமாகும் தினமான ஜனவரி. 27 ஆம் திகதி தற்போதைய தலைவர் புதிய தலைவரின் பெயரை உத்தியோக பூர்வமாக அறிவிப்பார்.

இங்கே வாக்களிக்கும் உரிமை கொண்டோர், வடக்கு கிழக்கிலுள்ள தமிழர் பிரதேச செயலக ரீதியில் அமைக்கப்படும் கிளைகளில் இருந்து தலா 05 பேரும் கொழும்புக் கிளைக்கு 5 பேருடன் தற்போதைய மத்திய செயற்குழுவில் இருக்கும் 43 பேருடன் மேலதிகமாக தலைவரால் (தற்போதைய) பரிந்துரைக்கப்படும் 12 பேரும் இந்த இரகசிய வாக்களிப்பில் வாக்களிக்க தேர்வாகியுள்ளனர்.

▶11

# ஈரான் பாகிஸ்தான் முறுகல் நிலை மத்திய கிழக்கில் யுத்த மேகம்

வானதி



ரஷ்யா-உக்ரேன் போர் முடிவில்லாமல் தொடர்கிறது. இஸ்ரேல்-ஹமாஸ் யுத்தம் இப்போது ஆரம்பமாகி உள்ளது. இந்த இடைவெளியில் ஈரானும், பாகிஸ்தானும் எல்லை மீறி குண்டு வீசி உள்ளன.

பாகிஸ்தானில் பதுங்கி இருக்கும் பயங்கரவாதிகள் தனது நாட்டைத் தாக்குவதாக ஈரான் குற்றம் சாட்டியுள்ளது. தனிநாடு கேட்க்கும் பலூலிஸ்தானுக்கு ஈரான் ஆதரவளிப்பதாக பாகிஸ்தான் தெரிவிக்கிறது.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள பல்வேறு இடங்களில் ஈரான் இராணுவம் அதிரடித் தாக்குதல் நடத்தியிருப்பது பரபரப்பையும், பதட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ஜெய்ஷ் அல் அதில் என்ற தீவிரவாத அமைப்பின் 2 முகாம்களை தாக்கி அழித்ததாக ஈரான் கூறியுள்ளது. ஈரானிலிருந்து ஏவுகணைகள் மூலம் இந்தத் தாக்குதலை ஈரான் நடத்தியுள்ளது. ஈரானின் இந்த அதிரடித் தாக்குதலால் பாகிஸ்தான் அதிர்ச்சி அடைந்துள்ளது.

ஈரான், சிரியாவில் இஸ்ரேலிய நிலைகளைக் குறி வைத்து ஈரான் தாக்கிய அடுத்த நாளே பாகிஸ்தான் பக்கம் அது திரும்பியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஈரானின் செயலால் பிராந்தியத்தின் அமைதிச் சூழல் பாதிக்கப்படும் அபாயம் எழுந்துள்ளது.

பாகிஸ்தான் - ஈரான் எல்லைப் பகுதியில், ஜெய்ஷ் அல் அதில் அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் அடிக்கடி ஈரான் இராணுவத்தினருடன் மோதலில் ஈடுபட்டு வந்தனர். இதனால்தான் அவர்களின் நிலைகளைத் தாக்கி அழித்துள்ளது ஈரான்.

இந்தத் தாக்குதல் குறித்து பலுசிஸ்தான் மாகாண தகவல் துறை அமைச்சர் ஜான் அச்சகாஸி கூறுகையில், இதற்கு நிச்சயம் பாகிஸ்தான் இராணுவம் பதிலடி கொடுக்கும் என்று நம்புகிறேன் என்று கூறியுள்ளார். இருப்பினும் பாகிஸ்தான் இராணுவத்தின் செய்தித் தொடர்புப் பிரிவு இதுவரை எந்தப் பதிலையும் அளிக்கவில்லை.

அதேசமயம், ஈரான் சர்வதேச விதிமுறைகளை, சட்டங்களை மீறும் செயலில் ஈடுபட்டுள்ளது. இது வன்மையாக கண்டிக்கத்தக்கது. இது கடும் விளைவுகளை ஏற்படுத்தும். இதை ஏற்க முடியாது என்று பாகிஸ்தான் வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது. அதேசமயம், ஈரான் வெளியுறவுத்துறை இதுவரை கருத்து தெரிவிக்கவில்லை.

ஈரான் இராணுவம், பாகிஸ்தான் பகுதிக்குள் புகுந்து தாக்கிய நிலையில் ஈரான் எல்லைக்குள் புகுந்து பாகிஸ்தான் இராணுவம் தாக்கியுள்ளது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே போர் மூளுமா என்ற அச்சம் கிளம்பியுள்ளது.



பாகிஸ்தானின் எல்லைப்புற மாகாணங்களில் ஏகப்பட்ட தீவிரவாத அமைப்புகள் இயங்கி வருகின்றன. இங்குதான் தீவிரவாதிகளுக்குப் பயிற்சி அளித்து அண்டை நாடுகளுக்கு அனுப்பி வருகின்றனர். இந்த தீவிரவாத முகாம்களால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடு என்றால் அது இந்தியாதான். காஷ்மீர் எல்லைப் புறம் வழியாக நடந்த தீவிரவாத ஊடுறுவல்களுக்கு அளவே இல்லை. இப்போதுதான் சற்று அடங்கியுள்ளனர்.

இந்த நிலையில் இந்தத் தீவிரவாதிகள் தற்போது ஈரானுக்குள் புகுந்து கலவரம் செய்து வருவதால் ஈரான் நாடு ஆத்திரமடைந்துள்ளது. பலுசிஸ்தான் மாகாணத்தில் ஜெய்ஷ் அல் அதில் என்ற தீவிரவாத குழு இயங்கி வருகிறது. இந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள், ஈரானுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி வந்தனர். இதனால் கோபமடைந்த ஈரான் அதிரடியாக பலுசிஸ்தான் மாகாணத்தில் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இதில் சிலர் கொல்லப்பட்டனர்.

இதனால் அதிர்ச்சி அடைந்தது பாகிஸ்தான். ஈரானுக்கு சரியான பதிலடி தரப்படும் என்று அது எச்சரித்திருந்தது. இந்த நிலையில் இன்று ஈரானுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளது பாகிஸ்தான். ஈரான் நாட்டின் சிஸ்தான் மற்றும் பலுசிஸ்தான் மாகாணங்களின் எல்லையில் உள்ள சரவன் என்ற இடத்தை குறி வைத்து பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது.

பலுசிஸ்தான் விடுதலை முன்னணி மற்றும் பலுசிஸ்தான் விடுதலைப்படை ஆகிய இரு தீவிரவாத அமைப்புகளைக் குறி வைத்துத் தாக்குதல் நடத்தியதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

இந்த இரு அமைப்புகளும் சுதந்திர பலுசிஸ்தானம் கோரி போராட்டம் நடத்தி வரும் அமைப்புகள் ஆகும். பலுசிஸ்தானில் ஏற்கெனவே தனி நாடு கோரி போராட்டங்கள் நீண்ட காலமாக நடந்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரான் தாக்குதல் நடத்தியுள்ள நிலையில் தற்போது பாகிஸ்தானும் பதிலடி கொடுத்துள்ளதால், பரபரப்பு அதிகரித்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான இந்த உரசல் போராக மாறி விடுமோ என்ற அச்சமும் எழுந்துள்ளது.

ஜெய்ஷ் அல் அதில் அமைப்பை கடந்த 2012 ஆம் ஆண்டு நிறுவினர். இந்த அமைப்பு சமீப காலமாக ஈரானில் பல்வேறு தாக்குதல்களை நடத்தி வந்தது. இதையடுத்து இந்த அமைப்பை தீவிரவாத அமைப்பாக ஈரான் அறிவித்தது.

ஈரானுக்குள் இருக்கும் பிரிவினைவாத பலூச் தீவிரவாதிகளை தாக்க ரொக்கெட்டுகள் மற்றும் ட்ரோன்களைப் பயன்படுத்தியதாக பாகிஸ்தான் கூறுகிறது .

பாகிஸ்தான் எல்லையில் உள்ள பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள ஒரு கிராமத்தை பல ஏவுகணைகள் தாக்கியதாக ஈரானிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன, இதில் நான்கு குழந்தைகள் இறந்தனர்.

இந்த நடவடிக்கையின் போது "பல பயங்கரவாதிகள்" கொல்லப் பட்டதாக பாகிஸ்தான் கூறுகிறது, இது "பயங்கரவாதிகளின் மறைவிடங்களுக்கு எதிராக மிகவும் ஒருங்கிணைக்கப்பட்டு குறிப்பாக குறி வைக்கப்பட்ட துல்லியமான இராணுவத் தாக்குதல்கள்".

பலூச் விடுதலை முன்னணி (BLF) மற்றும் பலூச் விடுதலை இராணுவம் இலக்குகளை பயன்படுத்தியதாக அது கூறியது.

BLF பாகிஸ்தான் அரசுக்கு எதிராக ஆயுதமேந்திய கிளர்ச்சியை நடத்தி வருகிறது, இதில் சீன குடிமக்களுக்கு எதிரான தாக்குதல்கள் மற்றும் பலுசிஸ்தானில் முதலீடுகள் அடங்கும். பாகிஸ்தான் எல்லைக்குள் மற்றொரு குழுவின் தளங்களை ஈரானியப் படைகள் தாக்கியதை அடுத்து, வியாழன் தாக்குதல் பதிலடியாக இருந்தது என்று பாகிஸ்தான் கூறுகிறது.

செவ்வாயன்று, ஈரானுக்கு எதிரான, ஈரானின் கிழக்கு சிஸ்தான் மற்றும் பாகிஸ்தானின் தென்மேற்கு பலுசிஸ்தான் மாகாணங்களுக்கு சுதந்திரம் கோரும் சட்டவிரோதமான சுன்னி முஸ்லிம் பிரிவினைவாதக் குழுவான ஜெய்ஷ் அல் அட்ல் அல்லது ஜஸ்டிஸ் ஆர்மியை ஈரான் குறிவைத்தது.

ராயல் யுனைடெட் சர்வீசஸ் இன்ஸ்டிடியூட் (RUSI) பாதுகாப்பு சிந்தனைக் குழுவின் அசோசியேட் சக பரா ஷிபன் கூறுகையில், "பாகிஸ்தானியர்கள் இதை எதிர்பார்க்கவில்லை என்று நான் நினைக்கிறேன், ஏனென்றால் ஈரான் பிராந்தியத்தில் வேறு இடங்களில் ஈடுபட்டுள்ளது.

பொதுமக்கள் தாக்கப்பட்டதாகவும், இரண்டு குழந்தைகள் கொல்லப் பட்டதாகவும் பாகிஸ்தான் கூறியது, இதன் விளைவுகள் டெஹ்ரான் பொறுப்பாகும் என்று எச்சரித்தது.

ஏற்கெனவே இஸ்ரேல் - ஹமாஸ் மோதலால், மத்திய கிழக்கில் அசாதாரண நிலை நிலவுகிறது. செங்கடல் பகுதியில் கப்பல்களைக் குறிவைத்து ஈரான் ஆதரவு அமைப்புகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்த நிலையில் பாகிஸ்தான் - ஈரான் இடையே மோதல் வெடித்திருப்பது பரபரப்பைக் கூட்டியுள்ளது. ஈரான், பாகிஸ்தான் இரண்டுமே அணு ஆயுத நாடுகள். ■

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
news@theempunal.com
THEEMPUNAL தீம்புனல்

# குறைவடைந்த வாக்காளர் எண்ணிக்கை

இலங்கையில் வழக்கமாக சுமார் 300,000 புதிய வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டாலும், 2023 இல் 207,000 பேர் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார். “தேர்தல் செயல்முறையின் ஒரு பகுதியாக இருப்பதில் இளைஞர்களின் ஆர்வம் குறைந்து வருவதே இதற்குக் காரணம்” என்று அவர் கருத்து தெரிவித்தார்.

வாக்காளர்கள் பதிவு (திருத்தம்) சட்டம், 2021 ஆம் ஆண்டு எண்.22 மூலம், 18 வயது நிரம்பியவர்கள், ஒன்லைனில் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யலாம், என்றார். 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் எண் சட்டத்தின் கீழ், வாக்காளர் பதிவு செய்பவர்கள் நான்கிற்கு ஒரு முறை புதுப்பிக்கப்படுவதாக அவர் கூறினார்.

“இந்த ஆண்டின் முதல் பட்டியலை ஜனவரி 01 ஆம் திகதிக்குள் நாங்கள் தயார் செய்கிறோம். அதன்பிறகு, பெப்ரவரி 01 முதல் மே 30 வரை, 18 வயது நிறைவடைந்த சுமார் 65,000 பேர் எங்களிடம் பதிவு செய்தனர். ஜூன் 01 முதல் செப்ரெம்பர் 30 வரை சுமார் 70,000 புதிய வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 70,000 க்கும் மேற்பட்டோர் ஒக்ரோபர் 01 முதல் ஜனவரி வரை சேர்ந்துள்ளனர். 2023 இல் நாங்கள் செய்த மூன்று திருத்தங்களின் போது சுமார் 207,000 புதிய வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். எங்களுக்கு தேர்தல் நடந்தால், இந்த 207,000 பேர் வாக்களிக்கலாம்,” என்றார்.

18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து குடிமக்களும் வாக்களிக்க முடியும் என்று இலங்கை அரசியலமைப்பு உத்தரவாதம் அளிக்கிறது இருப்பினும், இப்போது வரை, 18 வயதை எட்டியவர்கள் வாக்களிக்க குறைந்தது ஒரு வருடமாவது காத்திருக்க வேண்டியிருந்தது, ஏனெனில் வாக்காளர் பட்டியல்கள் வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே தயாரிக்கப்பட்டன.

“இளைஞர்களை வாக்களிக்க ஊக்குவிக்க நாங்கள் ஒன்லைனில் சென்றுள்ளோம். தயவுசெய்து அதைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்” என்று அவர் கூறினார். இந்த நேரத்தில் தேர்தலுக்கு செல்லுபடியாகும் வாக்காளர் பட்டியல் ஒக்ரோபர் 2023 இல் சான்றளிக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் தற்போது தேர்தல் நடத்தினால் அது செல்லுபடியாகும். வாக்காளர்கள் பதிவு (திருத்தம்) சட்டம், 2021 ஆம் ஆண்டு எண். 22 இன் படி, பெப்ரவரி 01 ஆம் திகதி வாக்காளர்களை எண்ணத் தொடங்கும் நாளாக, அதாவது, அவர்கள் வசிக்கும் இடத்தைச் சரிபார்க்கும் நாளாகத் தேர்ந்தெடுத்துள்ளோம். தற்போது 2024 வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணியை தொடங்கி உள்ளோம்,” என்றார்.

வாக்காளர் பதிவு செயல்முறையின் ஆரம்ப கட்டங்கள் கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் மக்களின் வீடுகளுக்குச் சென்று தரவுகளை சேகரிக்கின்றன. ஒரு கிராம உத்தியோகத்தர் இப்போது அதிக எண்ணிக்கையிலான குடும்பங்களைச் சந்திக்க வேண்டியுள்ளதாக ரத்நாயக்க கூறினார். “சில பகுதிகளில், குடும்பங்களின் எண்ணிக்கை அதிவேகமாக வளர்ந்துள்ளது,” என்று அவர் கூறினார். இலங்கையை விட்டு வெளியேறியவர்களின் தொகை கடந்த ஆண்டு அதிகரித்ததும் ஒரு காரணமாகும்.

2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலுக்கான பதிவு நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். 2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் பதிவு நடவடிக்கைகளை பெப்ரவரி முதலாம் திகதி ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளதால் அது தொடர்பான வேலைத்திட்டத்தை துரிதப்படுத்த தீர்மானிக்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். அதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் விரைவில் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

வாக்காளர் கணக்கெடுப்பில் ஒருதடவை பெயர்களைப் பதிவுசெய்தால் போதுமானது எனக்கருதி பலர் தொடர்கணக்கெடுப்புக் குறித்து அக்கறை செலுத்துவதில்லை. இதனால், புதிய தேருநர் இடாப்பில் அவர்களது பெயர் நீக்கப்பட்டுவிடுகிறது. இதைக் கருத்திற்கொண்டு கிராமசேவையாளர்கள் தற்போது மேற்கொண்டுவரும் 2023 ஆம் ஆண்டுக்கான கணக்கெடுப்பில் வாக்காளர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பெயர் இடம்பெறுவதை உறுதிசெய்வது அவசியமாகும்.

இலங்கையில் வாக்காளர் தினம் கொண்டாடப்பட்டுவரும் ஜூன் 01 ஆம் திகதியன்று 18 வயது பூர்த்தியடைந்த இலங்கைக் குடிமகனாகவுள்ள எவரும் வாக்களிக்கும் உரிமை பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள். வாக்காளர்களாகத் தகுதி பெற்றுள்ள புதியவர்களும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தேருநர் இடாப்பில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். இதன்மூலம் மாத்திரமே வாக்களிக்கும் உரிமை உறுதி செய்யப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். உதாரணமாக, 1989 ஆம் ஆண்டு யாழ்-கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் 11 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். தற்போது வாக்காளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்ததன் காரணமாகப் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 7ஆகக் குறைவடைந்துள்ளது. வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந்து செல்லுதல் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்களில் மாத்திரம் குறைவை ஏற்படுத்தும் ஒன்றல்ல. மாவட்டத்தின் அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் நிதி, மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கை போன்றவற்றிலும் குறைவை ஏற்படுத்தும். அந்தவகையில், வாக்களிக்கத் தகுதி பெற்ற அனைவரும் தங்களை வாக்காளராகப் பதிவு செய்தல் ஒரு தேசியக் கடமையாகும். எனவே, வாக்காளர்கள் அனைவரும் தாமதமின்றித் தமது கிராமசேவையாளருடன் தொடர்பு கொண்டு இந்த ஆண்டுக்கான வாக்காளர் கணக்கெடுப்பில் தங்கள் பெயர் இடம்பெறுவதைத் தவறாது உறுதி செய்துகொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ■

# கல்வி மிக நல்லது

இலங்கை இலவசக் கல்வி முறையைக் கொண்டிருப்பதாகப் பெருமையடித்தாலும், ஆரம்ப நிலை முதல் பல்கலைக்கழக மட்டங்களில் உயர்கல்வி வரை, சில நன்கு வளர்ந்த நாடுகளில் உள்ள மாணவர்களுக்கும் இது தனிப்பட்டதல்ல. நாட்டில் கல்வி வசதிகளில் உள்ள வரம்புகள் போட்டித் தேர்வுகளைச் சுற்றி ஒரு தேவையற்ற மற்றும் ஆரோக்கியமற்ற போட்டியை உருவாக்கியுள்ளது, இது எண்ணற்ற சிற்றலை-விளைவு சிக்கல்களை விளைவித்துள்ளது. இலங்கையில் பெற்றோர் வருடாந்தம் தமது பிள்ளைகளுக்கான கல்விக் கட்டணமாக 122 பில்லியன் ரூபாவை செலவிடுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய வெளிப்படுத்திய போது மேற்கூறிய போட்டியின் அத்தகைய இருண்ட பக்கமானது அண்மையில் வெளிப்படுத்தப்பட்டது. இந்த எண்ணிக்கையை இன்னும் விரிவாகக் கூறினால், இது மொத்த மாநிலக் கல்விச் செலவில் 30 சதவீதமாகும். ஒரு மாணவர், சராசரியாக, ஒரு மாதத்திற்கு சுமார் 20,000 ரூபாய் கல்விக்காகச் செலவிடுகிறார், இது குடும்பத்திற்கு குறிப்பிடத்தக்க நிதி நெருக்கடியை ஏற்படுத்துகிறது, குறிப்பாக அதில் ஒன்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இருந்தால்.

பள்ளி நேரத்திற்கு வெளியே கூடுதல் வகுப்புகள் அல்லது ரியூஷன் வகுப்புகள் ஒரு மோசமான விடயம் அல்ல, ஏனெனில் பள்ளிகளில் குழு கற்றல் உத்திகள் ஒவ்வொரு மாணவரின் அலைநீளங்களுடனும் எதிரொலிக்காது. மாணவர்களின் படிப்பில் உறுதியான அடித்தளத்தை உருவாக்குவது மட்டுமல்லாமல், பள்ளிகளில் கேட்க பயப்படும் கேள்விகளைக் கேட்க மாணவர்களுக்கு பாதுகாப்பான இடத்தையும் இது உருவாக்குகிறது, இது அவர்களை போட்டித் தேர்வுகளுக்குத் தயார்படுத்துவதில் நம்பிக்கையை அதிகரிக்கிறது. இருப்பினும், இது நடக்க, கல்வியானது பள்ளிக் கல்வியை விட ஒப்பீட்டளவில் தனிப்பயனாக்கப்பட்ட அணுகுமுறையை எடுக்க வேண்டும், மேலும் மாணவர்களின் தேவைகளை சிறப்பாகப் பூர்த்தி செய்ய ஆசிரியரும் இந்த உண்மையை அறிந்திருக்க வேண்டும்.

எவ்வாறாயினும், இலங்கைச் சூழலில், ரியூஷன் வகுப்புகளில் நடப்பது நேர் எதிரானது, இது தனியார் கல்வி வகுப்புகள் அவர்களின் நோக்கத்தை நிறைவேற்றுகிறதா? இல்லையா? என்ற கேள்வியை எழுப்புகிறது. இலங்கையில் கல்விக் கலாசாரம் ஒரு குறிப்பிட்ட முறையில் பரிணமித்துள்ளது, ஒரு ஆசிரியரின் வெற்றி அல்லது செயல்திறன் என்பது, பயிற்சி வகுப்பிற்கு ஆசிரியர் எத்தனை ‘தலைகளை’ ஈர்க்கிறார் என்பதன் மூலம் முழுமையாக தீர்மானிக்கப்படுகிறது. துணையாக இருந்து, இலங்கையின் கல்விக் கலாசாரம் பல மாணவர்களுக்கான பிரதான கல்வி ஆதாரமாக உருவெடுத்துள்ளது, இது ஆரோக்கியமற்ற நம்பிக்கையை உருவாக்கியுள்ளது. சிறந்த டோஸில் பரிந்துரைக்கப்படும் போது மட்டுமே பயிற்சிகள் பயனுள்ளதாக இருக்கும். கல்விக் கட்டணங்களை அதிகமாகப் பயன்படுத்துவதால், மாணவர்களின் சார்புநிலை உருவாகிறது. ஒரு மாணவன் ரியூஷன் வகுப்பைவிட பள்ளியைத் தவறவிட்டால், ரியூஷன் வகுப்பின் உதவியின்றி ஒரு மாணவன் தனது மதிப்பெண்ணைப் பெற முடியாவிட்டால், அந்த மாணவர் சொந்தமாகப் படிக்கத் தகுதியற்றவராக இருந்தால், எப்போதும் உதவியை நாடுகிறார். ரியூஷன் வகுப்பில், பெற்றோர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், ஏனெனில் அந்த அறிகுறிகள் மாணவர் சுயமாக வழிநடத்தும் கற்றலைக் கொல்லும் இறுதி பாதுகாப்பு வலையாக ரியூஷனை நம்பியிருப்பதை மட்டுமே குறிக்கும்.

ஒரு திடமான கல்வியைக் கொண்டிருப்பதன் குறிக்கோள், தேர்ந்தெடுக்கப்பட்ட வாழ்க்கைப் பாதையில் வல்லுநர்களாக எதிர்காலத்தில் வெற்றி பெற வேண்டும். கார்ப்பரேட் உலகில், சுய-எதிர்ப்பு, விமர்சன சிந்தனை மற்றும் சிக்கலைத் தீர்ப்பது ஆகியவை மிகவும் விரும்பப்படும் குணங்கள் க்ராஷ் கோர்ஸ் மூலம் கற்பிக்க முடியாத குணங்கள். கல்வி தொடர்பான அனைத்தும் ஒரு மாணவருக்கு கல்விக் கட்டணம் மூலம் அளிக்கப்படும் போது, அது கசப்பான தவிர்க்க முடியாத நிலைக்கு வழிவகுக்கும் ஆர்வத்தை முக்கியமாகக் கொன்றுவிடுகிறது, மாணவர் விருப்பத்தையும் சுயமாக கற்றல் திறனையும் இழக்கிறார்.

கல்விக் கட்டணத்தை அதிகமாகச் சார்ந்திருப்பதன் விளைவுகளானது அடிப்படையான வெளிப்பாடாக இருக்க வேண்டிய அவசியமில்லை மற்றும் பெற்றோர்களால் புரிந்து கொள்ளப்பட்டாலும், இலங்கையின் சோகமான உண்மை என்னவென்றால், கல்வி முறையின் போட்டி இந்த விடயத்தில் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் இருவரின் கைகளையும் கட்டிப்போட்டுள்ளது. வெளியேறிவிடுவோமோ என்ற பயத்தில் அவர்களை கல்விக் கட்டணத்தைப் பின்பற்ற வைக்கிறது. இன்னும் சோகம் என்னவெனில், ‘எதிர்காலத்திற்கு அவர்களைத் தயார்படுத்துகிறோம்’ என்ற போர்வையில் ஆசிரியர்கள் தங்களின் சமூகப் புகழைப் பயன்படுத்தி மாணவர்களைக் கையாள்வது மற்றும் பிரச்சாரத்தை கூட பரப்புவதுதான். பாடம் தவிர மற்ற வகுப்புகளில் சமூக, அரசியல் மற்றும் நிதி விடயங்களைப் பற்றி விவாதிப்பது ரியூஷன் மாஸ்டர்களிடையே ஒரு பொதுவான நடைமுறையாகிவிட்டது, மேலும் அவர்களுக்கு ஒரு முக்கிய ஈர்ப்பு காரணியாகவும் மாறியுள்ளது. சமூக ஊடகங்களில், வகுப்புகளின் போது அரசியல் சார்பு கருத்துகள் மற்றும் இனவெறி மற்றும் பாலியல் சித்தாந்தங்களைப் போதிக்கும் ஆசிரியர்களின் வீடியோக்கள் இப்போது பொதுவானவை, மேலும் விடயங்களை இன்னும் மோசமாக்கும் வகையில், இந்த ‘பிரசங்கங்களை’ கண்மூடித்தனமாக பின்பற்றும் ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் மாணவர்களின் ரசிகர் குழுக்கள் இருப்பதாகத் தெரிகிறது. தங்கள் ஆசிரியரை நிபந்தனையின்றி ஆதரிக்க பயப்படுகிறார்கள். ■

# அரங்கில் தமிழ் அடையாளத்தை வலியுறுத்தும் கூத்துக்கலைஞரும் ஆய்வாளருமான "பத்தண்ணா" இளைய பத்மநாதன்

முருகபூபதி

58 முதல் சந்திப்பு

பம்பலப்பிட்டி ஸ்ரீ கதிரேசன் மண்டபம். கலா ரசிகர்கள் நிறைந்திருந்திருந்த அங்கே மேடையேறிய ஏகலைவன் கூத்தின் இறுதிக் காட்சி.

"ஏழை மக்கள் எம்மை, வாழ விடா, வாழவிடா இந்த ஆளும் அரசர் ஓர் நாள், ஆளும் அரசர் ஓர் நாள் அழிந்துபோவார்.

ஆண்ட பரம்பரைகள், ஆண்ட பரம்பரைகள் பூண்டோடு ஓர் நாள் மாண்டு மடிந்து போகும். மாண்டு மடிந்துபோகும் மண்ணை விட்டே! ஏழைகள் எழுச்சி பெற்று - ஓர் நாள் ஆள்வோரை அழித்தொழிப்பார், நிச்சயம் அழித்தொழிப்பார்"

அரங்கில் அமர்ந்திருந்த அனைவரும் எழுந்து நின்று உணர்ச்சி பெருக்கோடு கரகோஷம் எழுப்புகின்றனர்.




நான் அன்று பார்த்த கூத்து அரங்காற்றுகைதான் ஏகலைவன். எழுதி, இயக்கியவர் இளைய பத்மநாதன் என்ற கலைஞர்.

குறிப்பிட்ட அரங்காற்றுகை 1980 களில் இடம்பெற்றதாக நினைவு. வீரகேசரியில் பணி முடிந்து, நண்பர் தனபாலசிங்கத்துடன் அந்த மண்டபத்திற்கு விரைந்தேன். தோழர் சண்முகதாசனும் வந்திருந்தார்.

அரங்கம் நிறைந்த கலா ரசிகர்கள். இறுதிக்காட்சி உணர்ச்சிபூர்வமாக அமைந்திருந்தது.

ஏகலைவன், விரல் வெட்டப்பட்ட தனது கையையும் துரோணரையும் பார்க்கின்றான். அந்த அரங்காற்றுகை முடியும்போது இரவு ஒன்பது மணியுமாகிவிட்டது. நான் எங்கள் நீர்கொழும்பூருக்குச் செல்வதற்கு பஸ்ஸை பிடிக்கவேண்டும்.

ஏகலைவனின் இயக்குநர் பத்தண்ணாவை அன்று என்னால் சந்திக்க முடியாது போய்விட்டது.

எதிர்பாராத நிகழ்வுகளின் சங்கமம் தானே வாழ்க்கை. பத்தண்ணாவை காலம் கடந்து, 1994 ஆம் ஆண்டின் பின்னர் அவுஸ்திரேலியா மெல்பனில் சந்திக்கின்றேன்.

அவ்வேளையில் அவர் நாடகக் கலைஞர் மாவை நித்தியானந்தன் மெல்பனில் ஆரம்பித்திருந்த பாரதி பள்ளியில் மாணவர்களுக்கு நாடகப் பயிற்சி வகுப்புகளை நடத்திக்கொண்டிருந்தார்.

இலங்கையில் வடமராட்சிப்பிரதேசம், பல ஆற்றல் மிக்க கல்விமான்களையும் கலைஞர்களையும் படைப்பிலக்கியவாதிகளையும் ஊடகவியலாளர்களையும் எங்கள் தேசத்திற்கு வழங்கியிருக்கிறது.

அறிஞர் கந்த முருகேசனார், கலைஞர் கிருஷ்ணாழ்வார், பேராசிரியர் கா.சிவத்தம்பி, எழுத்தாளர்கள் செ.கதிர்காமநாதன், ராஜஸ்ரீகாந்தன், தெணியான் ஆகியோர் முதல் பல ஆளுமைகளை நாம் பட்டியலிடலாம். அந்த வரிசையில் நாம் வியந்து பார்க்கும் கலைஞர்தான் பத்தண்ணா என அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் அண்ணாவியார் இளைய பத்மநாதன்.

1937 ஆம் ஆண்டு வடமராட்சி-நெல்லியடியில் பிறந்திருக்கும் அவர், கொழும்பில் எழுதுவினைஞராக பணியாற்றியவர்.

வடபுலத்தில் தீண்டாமை ஒழிப்பு இயக்கம் உச்சம் பெற்றிருந்த காலப்பகுதியில் அங்கிருந்த கலைஞர்களினால் உருவாக்கப்பட்டிருந்த அம்பலத்தாடிகள் என்ற கலைக்குழு, கிராமங்கள் தோறும் அரங்காற்றுகை செய்த பிரபல்யமான கந்தன் கருணையை மூத்த தலைமுறையினர் மறந்திருக்க மாட்டீர்கள். இதிலும் பத்தண்ணாவின் வகிபாகம் முக்கியத்துவம் வாய்ந்தது.

ஏகலைவன் ரூபவாகினியிலும் ஒளிபரப்பாகியது. அதனை கொட்டாஞ்சேனையில் தகவம் ராசையா மாஸ்டரின் இல்லத்திலிருந்து ஒரு நாள் இரவு, அவரின் குடும்பத்தினர் மற்றும் பேராசிரியர் சண்முகதாஸ்-மனோன்மணி தம்பதியருடன் இருந்து பார்த்து ரசித்தேன்.




1983 கலவரத்தையடுத்து ஏதிலியாக தமிழகம் சென்றிருக்கும் பத்தண்ணா, அங்கும் தனது ஆற்றல்களை வெளிப்படுத்தி வந்திருப்பவர். தமிழ்நாட்டில் பல்கலை அரங்கத்தின் அரங்கக்குழுவுடன் இணைந்து, ஏகலைவன், ஒரு பயணத்தின் கதை, தீனிப்போர் முதலானவற்றை அரங்கேற்றினார்.

1994 இல் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்தார். இங்கே மெல்பன் பாரதி பள்ளிக்கு எனது பிள்ளைகளை அழைத்துச்செல்லும் வேளைகளில் பத்தண்ணாவுடன் கலந்துரையாடி எனக்குத் தெரியாத பல விடயங்களை கேட்டுத் தெரிந்துகொண்டேன்.

பத்தண்ணா, ஏகலைவன் கூத்துக்காக முழுப்பாரதக் கதையையும் படித்தவர். அத்துடன் வில்லிபுத்தூர் பாரதமும் படித்திருக்கிறார். ஆய்வுகளை மேற்கொண்டார். இவ்வாறு அவரது கடின உழைப்பில் உருவான ஏகலைவன் தொடர்பாகவே அவரை, முதன் முதலில் மெல்பனில் சந்தித்தபோது ஒரு நேர்காணலையும் எழுதினேன்.



நான் இலக்கியப் பிரவேசம் செய்து 25 ஆண்டுகள் பூர்த்தியான காலப்பகுதி 1997 ஆம் ஆண்டில் வந்தது. அதனை எமது மூத்த படைப்பாளிகள், கலைஞர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வாக நடத்தினேன்.

பத்தண்ணா, கவிஞர் அம்பி, ஓவியர் கே.ரி.செல்வத்துரை, எஸ்.பொன்னுத்துரை ஆகியோர் அன்று பாராட்டப்பட்டனர். பேராசிரியர் ஆசி.கந்தராஜா தலைமையில் அந்த நிகழ்வு மெல்பன் வை.டபிள்யூ.சி.ஏ.மண்டபத்தில் நடந்தது.

அன்று வெளியிடப்பட்ட நம்மவர் மலரில் பத்தண்ணாவுடனான நேர்காணலும் வெளியானது. அதில் பத்தண்ணா சொன்ன கருத்தை கவனிக்கவும்:

"பிரபுக்களுக்கும் விவசாயி பாட்டாளிகளுக்கும் இடையே முரண்பாடு தோன்றலாம். ஆனால், வேடர்களுக்கும் அரசர்களுக்கும் இடையே என்ன முரண்பாடு? இது ஒரு விமர்சனம். வேடர்களுக்கு வேட்டையே தொழில். ஜீவாதராம். ஆனால், அரசர்களுக்கோ வேட்டை ஒரு பொழுதுபோக்கு. அங்கேதான் முரண்பாடு. அங்கேதான் நாடகத்தின் கருவே ஆரம்பிக்கின்றது. ஆளும் வர்க்கத்திற்கும் ஆளப்படும் வர்க்கத்திற்கும் உள்ள முரண்பாடு மட்டுமல்ல, ஆளும் வர்க்கத்துக்குள் உள்ள முரண்பாட்டையும் துரியோதனன் மூலம் நாடகம் பேசுகிறது.




துரோணருக்கும் மனக்குழப்பம் ஏற்படுகிறது. முன்பு அவர் ஒரு பரம ஏழை. இப்பொழுது அரச குரு. இப்பாத்திரப்படைப்பு, இந்தியாவில் பிராமணிய எதிர்ப்பாளர் மத்தியில் சில சர்ச்சைகளை ஏற்படுத்தியது.

ஏகலைவனின் நண்பர்கள், முக்கியமாக தந்தை, யாவுமே அரசியல் நிலைப்பாடுகள்தான். பாரதத்தில் அர்ஜுனனுக்குக் குருபக்தியை புகட்டவே ஏகலைவன் கதை வருகிறது. ஆனால், அதனைக் கூத்து வடிவில் மக்களிடம் கொண்டு சென்ற பொழுது அரசியல் முன்னெடுக்கப்பட்டது, வர்க்கப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது."

பத்தண்ணா, அவுஸ்திரேலியாவிலும் தனது அரங்காற்றுகைகளை நிகழ்த்தியவர். இங்கே அவரது நெறியாள்கையில் கவிஞர் அம்பியின் யாழ்பாடி, ஜேர்மன் நாடகாசிரியர் Bertolt Brecht இன் ஒரு பயணத்தின் கதை, ஆகியனவற்றையும் பார்த்திருக்கின்றேன்.

எமது அவுஸ்திரேலியத்தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் எழுத்தாளர் விழாக்களில் நடந்த கருத்தரங்குகளிலும் உரையாற்றியவர்.

ஒருவிழாவில், பத்தண்ணாவின் "காத்தான் கூத்து இசைக்கோலம்" விரிவுரைப்பாணியில் அறிமுகமானது. பொதுவாகவே ஒருவர் தமது 60 வயதில் தனது பணிகளிலிருந்து ஓய்வுபெற்றுவிடுவார். ஆனால், பத்தண்ணா அந்த வயதில் விக்ரோரியா பல்கலைக்கழகத்தில் பயின்று சிறப்புப்பட்டதாரியானார் (B.A. Hons – Performance Studies), அத்துடன் மொனாஷ் பல்கலைக்கழகத்தில் அரங்கக்கலைகளுக்காக முதுகலைமானி பட்டத்தையும் பெற்றார்.

Skin is deep என்ற தனிநபர் நாடகத்தையும் விக்ரோரியா பல்கலைக்கழகத்தில் நாடகத்துறை பேராசிரியர்கள், மாணவர்கள் முன்னிலையில் அரங்காற்றியவர்.

**நூல்வடிவில் வரவாகிய இவரது படைப்புகள்:** ஏகலைவன், தீனிப்போர், மீண்டும் இராமாயணம் மீண்டும் பாரதம், தனு.




அரங்கின் புரிதலும் புரியாமையும் குறித்து பத்தண்ணா எழுதியிருக்கும் விரிவான ஆய்வு: அரங்கத்திறம் சிலப்பதிகாரம். அமுதவிழாவும் கண்டுவிட்ட எங்கள் பத்தண்ணா கொண்டாடப்பட வேண்டிய ஆளுமை மிக்க கலைஞர். ■

# சர்வதேச நீதிமன்ற விவகாரம் நுட்பமாக கையாளும் இலங்கை



காஸாவில் நடப்பது இன அழிப்பு என்று தென்னாபிரிக்க அரசு சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்துள்ளதை அமெரிக்கா கண்டித்திருக்கிறது. ஆனால் ஐரோப்பிய நாடுகள் காஸாவில் நடக்கும் தாக்குதல்களைக் கண்டிப்பதுடன் இஸ்ரேல் அரசு மீதும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றன. காஸாவில் தொடரும் உயிரிழப்புகள் ஏற்க முடியாதவை என நியூயோர்க் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை கூட்டத்தில் இந்தியா அறிவித்துள்ளது. பாலஸ்தீன காஸா பகுதியில் நிலவும் சூழல் குறித்து இந்தியாவின் தற்போதைய நிலைப்பாட்டை தெரிவித்து உரையாற்றும் போது இந்தியாவின் ஐ.நாவுக்கான நிரந்தரப் பிரதிநிதி ருசிரா கம்போஜ் இவ்வாறு கூறியிருக்கிறார்.

ஆனாலும் இஸ்ரேல் அரசுடன் இந்திய மத்திய அரசு கொள்கையளவில் கைகோர்த்திருக்கிறது. தென்னாபிரிக்க அரசு இன அழிப்பு என்று வழக்குத் தாக்குதல் செய்திருப்பதை இந்திய மத்திய அரசு இதுவரையும் பகிரங்கமாக வரவேற்கவில்லை. மதில்போல் பூனை போன்று உள்ளது.

ஆகவே அமெரிக்க - இந்திய அரசுகள் இஸ்ரேலுடன் நிற்பதை அறிந்தே தென்னாபிரிக்கா தாக்கல் செய்த வழக்கை தமிழ்த்தேசிய அரசியலில் ஈடுபடும் தமிழ்க் கட்சிகளும் பகிரங்கமாக வரவேற்கவில்லை என்பது தெரிகிறது. தமிழ் சிவில் சமூக அமைப்புகளும் பாராட்டவில்லை.

இஸ்ரேலுடன் இணைந்து ஹமாஸ் இயக்கத்தை அழிக்க வேண்டும் என்பதில் அமெரிக்க இந்திய அரசுகள் ஓரணியில் நிற்கின்றன. தற்போதைய புவிசார் அரசியல் சூழலில் வல்லரசுகளிடையே எழுந்துள்ள அரசியல் போட்டியில் தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசா முற்று முழுதாக மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் எதிர்ப்பாளனாக மாறியிருக்கிறார்.

அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகளின் எதிராளியாக தென்னாபிரிக்கா, சர்வதேச நீதிமன்றத்தில் பாலஸ்தீன மக்கள் சார்பில் காஸாவில் நடப்பது இன அழிப்பு என்று பகிரங்கப்படுத்தி வழக்கும் தாக்குதல் செய்திருந்தாலும் அதனை பாலஸ்தீன புலம்பெயர் அமைப்புகள் நன்கு பயன்படுத்தி வருகின்றன.

சென்ற வியாழக்கிழமை ஆரம்பித்த முதல் நாள் விசாரணையில் தனது தரப்பு வாதங்களை தென்னாபிரிக்கா சர்வதேச நீதிமன்றத்தில் முன்வைத்துள்ளது. காஸாவில் போர் நிறுத்தப்பட வேண்டும் என்றும் தென்னாபிரிக்கா வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க மாநில அரசுகளின் உறுப்பினர்கள் இருநூறு பேர் காஸாவில் போர் போர்நிறுத்தம் செய்ய வலியுறுத்தி ஜனாதிபதி ஜோ பைடனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

சென்ற ஒக்ரோபர் ஏழாம் திகதி போர் ஆரம்பிக்கப்பட்டு நான்கு மாதங்களுக்கும் குறைவான நிலையில் காஸாவில் இறந்தவர்களின் எண்ணிக்கை 23 ஆயிரத்தையும் கடந்துள்ளதாகவும் இதனால் போரை நிறுத்துமாறும் அமெரிக்க உள்ளூர் பொது அமைப்புகளும் ஜோ பைடனுக்கு கடிதம் எழுதியிருக்கின்றன.

சர்வதேச நீதிமன்றத்தில் வாக்குமூலம் வழங்க எழுநூறு இஸ்ரேல் மக்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாக இஸ்ரேலிய ஊடகங்களே செய்தி வெளியிட்டிருக்கின்றன. இஸ்ரேலிய மக்களின் எழுபத்து ஐந்து சதவீதமான மக்கள் காஸாவில் போர் நடப்பதை விரும்புகின்றனர் என்றும் இந்த நிலையில் எழுநூறு பொது மக்கள் பாலஸ்தீன மக்களுக்காக சர்வதேச நீதிமன்றத்தில் வாக்குமூலம் வழங்கத் தயாராக இருப்பதாகவும் இஸ்ரேலிய ஊடகங்கள் கூறுகின்றன.

இன அழிப்பு என்று தென்னாபிரிக்கா வழக்குத் தாக்கல் செய்துள்ளதால் கணிசமான அளவு இஸ்ரேலிய மக்களுக்கு அச்சம் ஏற்பட்டு விட்டதாக அரபு ஊடகமான நியூஅரப் என்ற ஆங்கில செய்தி இணையத்தளம் கூறுகின்றது. மியன்மாரில் ரோகின்கிய முஸ்லிம் மக்களுக்கு நடப்பது இன அழிப்பு என்று சர்வதேச நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வழக்கு விசாரணைக்கு முழுமையான ஆதரவு வழங்கி வரும் பிரித்தானியா, காஸாவில் நடப்பது இன அழிப்பு என்று தென்னாபிரிக்கா தாக்கல் செய்துள்ள வழக்குத் தொடர்பாக அமைதியாக இருக்கின்றது.

சட்ட ஆதாரங்களைத் தேட வேண்டும் என்று மாத்திரம் பிரித்தானியா கூறியிருக்கிறது. அதே போன்று கனடாவும் கூறுகின்றது. காஸாவில் நடப்பது இன அழிப்புத் தொடர்பான சர்வதேச சட்டங்களைப் பயன்படுத்த வேண்டும் என்றும் கனடா கூறுகின்றது.

தென்னாபிரிக்க அரசு மேற்கு எதிர்ப்புத் தன்மை கொண்டது என்பதால், பிரித்தானியா, கனடா போன்ற நாடுகள் தென்னாபிரிக்க அரசு சர்வதேச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்குக்கு ஆதரவு வழங்கத் தயங்குகின்றன.

ஆகவே ரஷ்ய - உக்ரைன் போர்ச் சூழலில் குழப்பியிருந்த உலக அரசியல் ஒழுங்கு தற்போது இஸ்ரேல் - கமாஸ் போர் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து மேலும் குழப்பமடைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

தென்னாபிரிக்கா வழக்குத் தாக்கல் செய்த பின்னர் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளிடையேயான உலக அரசியல் அணுகுமுறையில் முன்னுக்குப்பின் முரணான வாதங்கள் எழுந்துள்ளதையும் அவதானிக்க முடியும்.

இந்த அரசியல் சூழ்நிலையை இலங்கை நன்கு பயன்படுத்துகிறது குறிப்பாக முள்ளிவாய்க்கால் போரில் சுமார் நாற்பதாயிரம் மக்கள் கொல்லப்பட்டும் ஒன்றரை இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் காணாமல் போயிருப்பதாகவும் 2010 இல் வெளியான ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

ஆனாலும் இன அழிப்பு என்று எந்த ஒரு நாடும் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முன்வரவில்லை. இதற்கு அப்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவைக் கையாண்ட அணுகுமுறையே காரணம் என்பது வெளிப்படை.

நான்கு மாதங்களில் 23 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்ட பின்னர் காஸாவில் நடப்பது இன அழிப்பு என்று தென்னாபிரிக்கா வழக்குத் தாக்கல் செய்ததை உணர்ந்தும் அச்சமடைந்த நிலையிலும் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. சர்வதேசத்தை நுட்பமாகக் கையாள ஆரம்பித்திருக்கிறார். தென்னாபிரிக்கா சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதை மத்திய கிழக்கு நாடுகள் வரவேற்றுள்ளன. இப் பின்னணியில் மத்திய கிழக்கு நாடுகளின் தூதுவர்களுடன் ரணில் விக்கிரமசிங்க சென்ற புதன்கிழமை பேச்சு நடத்தியிருக்கிறார். தூதுவர்களுடன் பேசப்பட்ட விடயங்கள் எதுவும் ஊடகங்களில் வெளிவரவில்லை.

ஆனால் மத்திய கிழக்கு பிராந்தியம் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கைகள் தொடர்பாக ரணில் தூதுவர்களிடம் தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேவேளை, ஏனைய கொழும்பில் உள்ள மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் அல்லாத நாடுகளின் தூதுவர்களையும் ரணில் சந்தித்துக் கலந்துரையாடுவார் என்று கொழும்பு உயர்மட்ட அரசியல் தகவல்கள் கூறுகின்றன.

ஏனெனில் குழம்பியுள்ள உலக அரசியல் ஒழுங்குச் சூழலில் எந்த ஒரு சிறிய நாடுகளின் ஒத்துழைப்புகளும் அமெரிக்கா போன்ற வல்லரசுகளுக்கு தேவைப்படுகின்றன. அதேபோன்று சில புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் ஏதாவதொரு சிறிய நாடுகளைப் பயன்படுத்தக் கூடும் என்ற அச்ச நிலை இலங்கைக்குத் தற்போது உருவாகியுள்ளது.

குறிப்பாக கனடா, இலங்கைத்தீவில் ஈழத்தமிழர்களுக்கு நடந்தது இன அழிப்பு என்று கூறி வருகின்றது. அதுவும் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் ஏட்டிக்குப் போட்டியாக கனடா புலம்பெயர் தமிழர்களின் வாக்குகளை மையமாகக் கொண்டு பேசி வருகின்றன.

சில சமயங்களில் கனடாவின் வெளியுறவுக் கொள்கையில் தமிழ் இனஅழிப்பு என்பது இணைக்கப்பட்டால் அதனை மையமாகக் கொண்டு வேறு சில சிறிய நாடுகளைப் புலம்பெயர் தமிழர்கள் பயன்படுத்துவார்கள் என்று கருதியே அதனைத் தடுக்கும் முன்னேற்பாடுகளில் இலங்கையின் வெளியுலக இராஜதந்திர சேவை அதிகளவு கவனம் செலுத்துகின்றது.

மத்திய கிழக்கு நாடுகளைச் சந்தித்து பாலஸ்தீன மக்களுக்கு இலங்கை முழு ஆதரவு என்று ரணில் உறுதியளித்திருந்தாலும், அமெரிக்க - இந்திய அரசுகளைப் பகைத்துகொள்ளாத முறையில் இஸ்ரேல் அரசுடன் இலங்கை முழு அளவில் மறைமுகமாகக் கைகோர்த்திருக்கிறது என்பதுதான் உண்மை.

1983 இல் ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் வடக்குக் கிழக்கில் சிங்கள குடியேற்றங்களை எவ்வாறு செய்ய வேண்டும் என்பது குறித்து இஸ்ரேல் ஆலோசனை வழங்கியிருந்தமையும் தற்போது ஆதரவு வழங்கக் காரணம்.

**( 11 ஆம் பக்கம் பார்க்க...)**

# அயோத்தி இராமர் கோவில் சொல்லும் செய்தி என்ன?



✍ நியூசிலாந்து சிற்சபேசன்

இந்தியத் துணைக்கண்டத்திலும், பூமிப்பந்தெங்கிலுமுள்ள இந்திய வம்சாவளியினரிடையேயும் "இராமர்" என்பது மந்திரச் சொல்லாகும். அதனுடைய உள்ளார்ந்த கருத்தியல் பிரதேசரீதியாக மாறுபடக்கூடியதாகும். பெருவெட்டில் சொல்வதெனில், விந்தியமலைக்குத் தெற்கே காப்பிய நாயகனாகக் கொண்டாடப்படுகின்ற "இராமர்", விந்தியமலைக்கு வடக்கே வானுயர்ந்த தெய்வமாகப் போற்றப்படுகின்றான்.

ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். அதுபோல, "இராமர்" என்னும் சொல்லின் "மந்திரசக்தியைப்" புரிந்துகொள்ள ஒன்றைச் சொல்லலாம்.

அது சாமானியர்களின் உள்விறாந்தைகளில் தொலைக்காட்சிப் பெட்டி புகுந்த காலகட்டமாகும். அப்போது, இராமாயணம் தொலைக்காட்சித் தொடராக, இந்தியாவிலே,



ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. அது ஏற்படுத்திய தாக்கம் வார்த்தைகளில் வர்ணித்துவிடக்கூடியதல்ல. தொலைக்காட்சிப்பெட்டி தென்பட்ட இடங்களிளெல்லாம், இராமாயணம் பார்க்க மக்கள் கூடினார்கள். "இராமர்" தோன்றுகின்ற காட்சிகளிளெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டார்கள். சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார்கள்.

அத்தகைய போற்றுதலுக்குரிய இராமபிரானின் பிறப்பிடமே அயோத்தியாகும். அது, உத்திரப்பிரதேச மாநிலத்தில், சாராயு நதிக்கரையில் அமைந்திருக்கின்றது. இராம ஜென்மபூமி எனவும் அழைக்கப்படுகின்றது.

அங்கே அமைக்கப்பட்டுள்ள இராமர் கோவிலே, ஜனவரி 22 இல், பூர்வாங்கமாகத் திறந்து வைக்கப்படுகின்றது. கோவில் வளாகம் எழுபது ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டதாகும். அதிலே சுமார் ஏழு ஏக்கர் விஸ்தாரணத்தையும், மூன்று தளங்களையும் கொண்ட கோவில் கட்டடத்தின் மையப்பகுதியில், சுமார் நான்கு அடி உயரமான இராமபிரானின் உருவச்சிலை நிறுவப்படுகின்றது.

அயோத்தியில் பெருமெடுப்பில் நிர்மாணிக்கப்பட்டு, அரசின் அனுசரணையோடு, தேசமே திரண்டெழுந்து கொண்டாடுகின்ற இராமர் கோவில் மீள்நிர்மாணம் கடந்து வந்த பாதை கரடுமுரடானதாகும்.

இராமஜென்மபூமி சர்ச்சை இன்று நேற்று ஏற்பட்டதல்ல.

இஸ்லாமியப் படையெடுப்புக்களால், 16 ஆம் நூற்றாண்டில், இராமர் கோவில் தகர்த்தப்பட்டு மசூதி நிறுவப்பட்டபோது ஆரம்பமாகியது.

1800களின் நடுப்பகுதிகளிலேயே இராமஜென்மபூமியை மீளப்பெறும் முனைப்பு வெளிப்படையாகியது. அதனால், இந்து - இஸ்லாமிய கலகங்கள் ஆரம்பித்தன.

சர்சைக்குரிய பிரதேசத்தை, இந்து மற்றும் இஸ்லாமிய இடங்களாக தனித்தனியாக அடையாளப்படுத்தி, 1857 ஆண்டு அளவிலேயே, அன்றைய பிரித்தானிய காலனித்துவ அரசு எல்லை வகுத்தது.

அந்த ஏற்பாடு, அடுத்த 90 ஆண்டுகளுக்கு சர்ச்சைகளுடனே தொடர்ந்தது எனலாம்.

இந்திய சுதந்திரம் பெற்ற பின்னர் சர்ச்சைகள் உக்கிரமடைந்தன. அந்த இடத்திற்கான உரிமையைக் கோரிய தரப்புக்கள் நீதிமன்றத்தை நாடின.

நீதிமன்ற விசாரணை நிலுவையில் உள்ள காரணத்தின் அடிப்படையில், யாருமே உள்நுழைய முடியாத தடையை 1949 இல் அரசு விதித்தது.

அதன்பின்னர், நீதிமன்றத்தில் விசாரணைகள் தொடர்ந்தன. வருடங்கள் உருண்டோடின.

இராமர் கோவில் விவகாரத்தில், சங்கப்பரிவார் எனப் பொதுவில் சுட்டக்கூடிய, இந்து அமைப்புக்கள் ஆரம்பம் முதலே அதீதமான பற்றுதலைக் கொண்டிருந்தன. இந்திய விடுதலையை வேண்டிய காலகட்டத்திலேயே, இந்து அடையாளங்களை சங்கப்பரிவார் முன்னிறுத்தியது. அவற்றினுடைய வழித்தோன்றலே, தற்போதைய, பாரதீய ஜனதாக் கட்சி ஆகும்.

1984 இல் இராமர் கோவில் அமைக்கப்பட வேண்டும் என்னும் எழுச்சி வீறுகொள்ள ஆரம்பித்தது.

1986 இல் சர்ச்சைக்குரிய இராம ஜென்மபூமி பிரதேசத்தில் இந்துக்கள் வழிபாடு செய்வதற்கான அனுமதியை மாவட்ட நீதிமன்றம் வழங்கியது.

1989 இல் விஸ்வ ஹிந்து பரிஷத்தினால் இராமர் கோவிலுக்கான அத்திவாரக்கல் நாட்டப்பட்டது.

அதே காலப்பகுதியில், பாரதீய ஜனதாக் கட்சி சுண்டியிழுக்கும் வளர்ச்சியைத் தேசிய அளவிலே பெறத் தொடங்கியது. இராமர் கோவில் நிர்மாணத்தை முன்னிறுத்தி, அன்றைய தலைவரான, அத்வானி முன்னெடுத்த இரதயாத்திரை பரவலான கவனிப்பைப் பெற்றது. அதனைத் தொடர்ந்த



ஆண்டுகளிலே, "ஹிந்தி பெல்ட்" என்று சொல்லப்படுகின்ற மாநிலங்களான மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான், ஹிமாச்சல் பிரதேசம், உத்தரப்பிரதேசம் போன்றவற்றிலே பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது.

சங்கப்பரிவார் முன்னெடுத்த இராமர் கோவில் பிரசாரத்துக்கு, உத்தரப்பிரதேசத்தில் அமைந்த கல்யாண் சிங் தலைமையிலான பாரதீய ஜனதாக் கட்சி அரசு தோன்றாத்துணையாகியது.

1992 டிசம்பர் 6 ஆம் திகதி சர்சைக்குரிய பிரதேசத்தில் "கரசேவக்" என்று சொல்லப்படுகின்ற இந்து தொண்டர்கள் லட்சக்கணக்கிலே திரண்டபோது உணர்வுகள் கொந்தளித்தன. கல்யாண் சிங் தலைமையிலான உத்தரப்பிரதேச அரசும், பிவி நரசிம்மராவ் தலைமையிலான இந்திய அரசும் மோனத்தவத்திலிருந்த வேளையில், சர்சைக்குரிய, பாபர் மசூதி தகர்த்தப்பட்டது.

அதன்பின்னர் வழமையான விசாரணைகள் நடைபெற்றன. வழக்குகள் தொடரப்பட்டன. 2010 செப்ரெம்பரில் சர்ச்சைக்குரிய பிரதேசத்தை, சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே, சமமாகப் பங்கிட வேண்டுமென அலகாபாத் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அந்தத் தீர்ப்பை எதிர்த்து, சம்பந்தப்பட்ட தரப்புக்கள், டெல்லி உச்சநீதிமன்றத்தை நாடின. சுமார் ஏழுவருடங்கள் வழக்கு விசாரணைகள் நடைபெற்றன. உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அடங்கிய "கன்ஸிடுயூஷனல் பென்ச்" அமைக்கப்பட்டது. விசாரணைகளின் முடிவில், சர்ச்சைக்குரிய இடம் இராமர் கோவிலுக்கு உரியது என்னும் தீர்ப்பை, 2019 நவம்பரில், உச்ச நீதிமன்றம் வழங்கியது. அதன் மூலமாக, சுமார் ஐந்நூறு ஆண்டுகளாகத் தொடர்ந்த சர்ச்சை முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

அதன்பின்னர், 2020 மார்ச் மாதத்தில் அத்திவாரம் நாட்டப்பட்டது. 2024 ஜனவரி 22ல் இராமர் கோவில் திறந்து வைக்கப்படுகின்றது.

இந்தியப் பாரம்பரியத்தின் மையக் கோட்பாடு "அறம்" எனச் சொல்லலாம். அறத்திற்கான வரைவிலக்கணமாகவே இராமபிரானின் வாழ்வு சொல்லப்படுவதுண்டு. அத்தகைய இராமபிரானின் வாழ்வு மட்டுமல்ல, பிறப்பிடமும் அறத்திற்கு இலக்கணமாகியிருக்கின்றது.

அந்நிய ஆக்கிரமிப்பால் அழிக்கப்பட்ட அயோத்தி இராமர் கோவில் கரடுமுரடான பாதைகளைக் கடந்து வானுயர்ந்திருக்கின்றது. அது, அறம் வெல்லும் என்பதையே பறைசாற்றுகின்றது. ■

# மனம் மாறியது

அலர்மேலு ரிஷி




டிரிங் டிரிங் ரிஷீவரைக் கையில் எடுத்து "ஹலோ" என்றான் ராகவன். அடுத்து 'அப்பா நீங்களா! இங்கே வரேளா? நம்ப முடியல்லியே ரிஷீவரைக் கையால் பொத்திக்கொண்டே" மாலதி! அப்பா நம்பகூட வந்து இருக்க முடிவு பண்ணிட்டாராம்." சொல்லியபடி ரிஷீவரை மனைவியிடம் தந்தான். "அப்பா! எப்படியிருக்கேள்? இப்பவாவது மனசு மாறிச்சே ரொம்ப சந்தோஷமாயிருக்கு. சீக்கிரமா புறப்பட்டு வாங்கோ" பேச்சைமுடித்துவிட்டு ஒரு துள்ளலுடன் ராகவனிடம், "இப்பத்தான் எனக்கு நிம்மதியாயிருக்கு. என்ன இருந்தாலும் அம்மா போனப்பறம், உங்கப்பா இந்தியாவிலே தனியா இருக்கிறது நல்லாவா இருக்கு?" என்று கேட்டபடியே உள்ளே சென்று ஆகவேண்டிய காரியங்களைக் கவனிக்கலானாள்.

ராகவனின் அப்பா சுந்தரமையர் சுயமாகத் தன்னை வளர்த்துக் கொண்டவர். எளிய குடும்பத்தில் பிறந்த அவர் உள்ளூர்ப் பள்ளியில் படிப்பை முடித்த பின் இராமகிருஷ்ண மடத்தார் ஆதரவால் சென்னையில் பட்டப்படிப்பை முடித்து சட்டக் கல்லூரியில் சேர்ந்து வழக்கறிஞர் பட்டம் பெற்று தங்கப்பதக்கத்தையும் வென்றார். பிரபல வழக்கறிஞர் ராகவாச்சாரியிடம் ஜூனியராய் சேர்ந்து நான்கு ஆண்டுகள் பயிற்சிபெற்று, பின்பு அரசாங்க வக்கீலானார். படிப்படியாக பதவி உயர்வு பெற்று, பப்ளிக் பிராஷிகியூட்டர் ஆனார்.

இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையாகி அவர்கள் வளர்ந்து இஞ்ஜினீயர்களாகி அமெரிக்காவில் வாழத் தொடங்கி விட்ட பிறகும், தானும் தன் மனைவி என்றான பிறகும் ஆபீஸ் அறை, சட்ட புத்தகங்கள், கோர்ட்டு, வழக்கு, வாய்தா, தீர்ப்பு என்று உழைப்பு என்ற வட்டத்துக்குள்ளேயே வாழ்ந்துவிட்டார். குடும்பப் பிரச்சினைகள், பொறுப்புகள் என்று எதுவும் அவரை இதுவரை பாதித்ததே இல்லை. மனைவி மங்களத்துக்கு உதவி என்றால் ஓடிவர மூன்று தமையன்மார்கள் இருந்ததுதான் காரணம்.

ஆயிற்று! நேற்றோடு அரசுப் பணியில் ஒய்வு பெற்று வீடு வந்து சேர்ந்து விட்டார் சுந்தரமையர். காலை எழுந்தவுடன் காப்பியுங் கையுமாக ஹிந்திப் பேப்பருடன் போர்டிகோலில் வந்தமர்ந்தார். செய்திகளைப் படித்து முடித்தவுடன்தான் கோர்ட்டுக்குப் போகும் வேலை இனியில்லை என்பது நினைவுக்கு வந்தது. அடுத்தபடி என்ன செய்வது? ஒன்றும் புரியவில்லை. மங்களத்தைத் தேடி சமையலறைக்குச் சென்றார்.

"மங்களம், வேலைக்குப் போகிறவர்களுக்கெல்லாம் ஆண் பெண் யாராக இருந்தாலும் 'றிற்டையர்மென்ட்' என்று ஒன்று இருக்கிறதே, உன்னைப் போன்ற சமையலறையோடு வாழ்கின்ற பெண்களுக்கெல்லாம் மட்டும் ஒய்வுபெறும் நாளே கிடையாதா?"

நல்லாருக்கே நீங்க சொல்றது! வயிறு லீவு கொடுத்தா நாமும் சமையலுக்கு லீவு கொடுக்கலாம். இல்லே அமெரிக்கா மாதிரி வாரத்துக்கு ஒரு நாள் சமச்சு பிரிட்ஜிலே வச்சுட்டு ஹாயா இருக்கலாம். இங்கே நம்ம ஊர்லே முடியுமா? கரண்ட் எப்போ போகும்னு சொல்ல முடியாதே.

"உன் மாட்டுப்பெண் மாலதி அமெரிக்காவுக்கு தன்னோட பிரசவத்துக்கு உன்னை வரச் சொன்னப்பகூட எங்க ஆத்துக்காரரை விட்டுட்டு வரமுடியாதுன்னுட்டே, ஆனா அங்கே இருந்து குடித்தனம் பண்ணினவா பேசறமாதிரி அழகா பேசறியே"

"நான் ஏன் வரமாட்டேன்னு சொன்னேன்னு உங்களுக்கே தெரியும். சமைச்சு வச்சதை எடுத்துப் போட்டுண்டு சாப்பிடக் கூடத் தெரியாத நீங்க என்னைப் பொருத்தவரை கைக்குழந்தை மாதிரிதான். அதனால் என்ன. மாலதியின் பெரிம்மாவின் பொண்ணு கலியாணி டல்லஸிலிருந்து போய் மாலதி பிரஷவத்தின் போது ஒரு மாசம் இருந்து செஞ்சாளே! அவ இந்தியா வந்து சொன்னப்போதான் அமெரிக்காவிலே எல்லா மனுஷாளும் எப்படி காரியங்களைச் சமாளிக்கறான்னு தெரிஞ்சது."

"ஏன் மங்களம், இப்பத்தான் நான் றிற்டையர் ஆகிட்டேனே, பிள்ளைகிட்டே போகலாமா?"

"போகலாம். அங்கே வந்து நீங்கள் என்ன பண்ணுவேள்? நானாவது அடுப்படி காரியங்களை இழுத்துப் போட்டுண்டு பிஷி ஆயிடுவேன். உழைச்சிண்டே இருந்த உங்களாலே வீட்டிலேயே அடஞ்சு கிடக்க முடியுமா?"

"உனக்கு அமெரிக்கா போற ஆசைகூட இல்லியா?"

இதப்பாருங்கோ, ஆயிரந்தான் அமெரிக்காவப் பத்தி யார் என்ன சொன்னாலும் எனக்கு உங்க நிழல்லே இருக்கிறதுதான் சொர்க்கம். கடைசி மூச்சு இருக்கிற வரை உங்களோடயே ஒட்டிண்டு இருந்திடறேன். பிள்ளைகளுக்கு என்ன குறைச்சல்?

சிறுசுகள், உடம்பிலே பலம் இருக்கு, கை நிறைய டாலர் டாலரா சம்பளம், கொஞ்ச காலம் அவாளுந்தான் ஜாலியா இருந்துட்டுப் போகட்டுமே! நாம எதுக்கு நடுவுலே உங்களுக்கு ஆசையாயிருக்குன்னா சொல்லுங்கோ, சின்னவன் மாதவன் உதவிக்கு வாங்கோன்னு கூப்பிட்டா ஒரு ரெண்டு மாசம் போய் இருந்துட்டு வரலாம். இப்போ திருப்திதானா?"

சுந்தரமையருக்குக் கண்கள் குளமாயின. இப்படியும் ஒரு பெண்ணா?! ஒரு நாளைக்கு பத்து பதினைந்து என்று தொட்டதுக்கெல்லாம் விவாகரத்து கேட்கும் பெண்களுக்கு நடுவே நம்முடைய கலாசாரத்தில் ஊறிப்போன மங்களத்தின் பண்பாட்டைக்கண்டு வாயடைத்துப் போனார்.

ராகவனுக்கும் அப்பாவின் ஓயாத உழைப்பும் குழந்தையைக் கவனிப்பதுபோல் அப்பாவைக் கவனிக்கும் அம்மாவின் குணமும் நன்றாகத் தெரியும். இதனால்தான் அவனும் அவன் மனைவியும் அவர்களை எதிர்பார்க்கவேயில்லை. தங்கள் வேலை நேரத்தை அட்ஜஸ்ட் பண்ணிக் கொண்டு இரண்டு குழந்தைகளையும் கவனித்துக் கொண்டார்கள். குழந்தைகளை வளர்ப்பதில் உள்ள பிரச்சினைகளை அவர்கள் ஒருபோதும் அப்பா அம்மாவிடம் காட்டிக்கொண்டதில்லை.

சுந்தரமையர் றிற்டையர் ஆன அடுத்த நாளே ஒரு முடிவுக்கு வந்தார். இனி, மனைவியின் நிழலோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்வது என்று முடிவு செய்துவிட்டார்.

"மங்களம், இனிமே சமையலில் உனக்கு ஒத்தாசயா இருக்கப் போறேன்." என்றவர், அன்று முதல் காய்கறி நறுக்குவது, தேங்காய் திருவுவது, மிக்ஸியில் அரைத்து தருவது என்று சின்னச் சின்ன உதவிகளைச் செய்ய ஆரம்பித்தார். சேர்ந்து சாப்பிடுவது (இதுவரை அவர் அறியாத ஒன்று), சேர்ந்து உட்கார்ந்து ரி.வி பார்ப்பது, மாலையில் ரெண்டு பேரும் காலார நடந்துவிட்டு வருவது என்று வழக்கப்படுத்திக் கொண்டார். ஏதோ இதுவரை இழந்துவிட்ட ஒன்றை இப்போது பெற்றதுபோல் உள்ளூர ஓர் ஆனந்தம்.

திடீரென்று பெருகும் நதிப் பிரவாகம் போல, சில திருப்பங்கள் வாழ்க்கைத் திசையையே திருப்பிவிடும் என்பதுதான் எவ்வளவு நிஜம்!. இரண்டு நாட்களாகத் தலைவலி என்று படுத்த மங்களம் திரும்ப எழுந்திருக்கவேயில்லை. டாக்டருக்கே புரிபடாத மரணம். துக்கம் கேட்க வந்தவர்கள் எல்லாம்," மங்களத்துக்கென்ன, ஆசை நிறஞ்ச ஆத்துக்காரர், மணி மணியா இரண்டு இஞ்ஜினீயர் பிள்ளைகள், கல்யாணம், காட்சி, பேரக் குழந்தை எல்லாம் பார்த்து அனுபவித்துவிட்டாள். பூவும் பொட்டுமா போக ரொம்பவும் கொடுத்து வச்சிருக்கணும்" என்று மெச்சிவிட்டுப் போய் விட்டார்கள். ஆனால் சுந்தரமையருக்கு? விதி இவ்வளவு கொடுமையானதா! மங்களத்தின் பெருமையை இவ்வளவு காலத்திற்குப் பிறகு புரிந்து கொண்டவர் அவளோடு இணைந்து சந்தோஷம் அனுபவிக்க நினைத்த நேரத்தில்தானா இப்படி ஒரு துர்பாக்கியம் நிகழவேண்டும்? கொடுப்பனை இல்லாததை நினைத்து நெஞ்சு வலித்தது.

பிள்ளைகள் இருவரும் குடும்பத்தோடு வந்து 15 நாட்கள் இருந்து காரியங்களை முடித்துவிட்டுத் திரும்பினார்கள். போகும்போது இருவருமே அப்பாவை அழைத்துப் போகத் தயாராக இருந்தார்கள். ஆனால் எவ்வளவு வற்புறுத்தியும் "கொஞ்சம் அவகாசம் வேண்டும் யோசிச்சு முடிவெடுக்க" என்று சொல்லி அவர்களை அனுப்பி விட்டார் சுந்தரமையர். இப்போது ஒரே மாதத்திற்குள் அவர் மனம் மாறியது எப்படி? போன வாரம் காலார நடந்துவிட்டு வரலாம் என்று பீச்சுக்குப் போனார் சுந்தரமையர். அங்கே நண்பர் சேஷாத்ரி எதேச்சையாகக் கண்ணில்பட்டார். இருவரும் கொஞ்ச நேரம் ஏதேதோ பேசிக் கொண்டிருந்து பின் பேச்சு அமெரிக்காவைப் பற்றி திசை திரும்பியது.

"ஓய்! விஷயம் தெரியுமா? அமெரிக்காவிலே எல்லாரும் கை நிறைய சம்பாதிக்கிறான்னு பெருமைப்பட்டுக்கிறோமே, அங்கே குழந்தையை 12 வயது வரையிலும் வீட்டிலே தனியாவிடக்கூடாதாம். விட்டா போலீஸ் நடவடிக்கை எடுக்குமாம். யாராவது இருந்து பார்த்துக்கணும். இல்லே டேகேர் சென்டரிலே கொண்டுபோய் விடணுமாம். இதனாலே நியூயோர்க்கிலே இருக்கிற என் மச்சினன் பிள்ளை தன் குழந்தையைப் பாத்துக்க யாராவது அங்கு வரணும்னு கேட்டிருக்கான்."

டக்கென்று சுந்தரமையருக்குப் பொறி தட்டினாற்போல ஒரு உணர்வு. "நம்முடைய ராகவனுக்கும் மாலதிக்கும்கூட இதே பிரச்சினைதானே இருக்கும். மங்களத்துக்குத்தான் உதவியாக இருக்கக் கொடுத்து வைக்கவில்லை. மாலதியாவது ராகவனுடன் சந்தோஷமாக இருக்க நாம் போய் அந்தக் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளலாமே". இந்த எண்ணம் நெஞ்சில் பளிச்சிட்டதன் பலன்தான் அவரது அமெரிக்கப் பயணம். **(முற்றும்...)**

# தமிழ்ச்செல்வனின் நஞ்சாகும் நிலம் நூல் வெளியீடு

ஊடகவியலாளர் தமிழ்ச்செல்வனின் நஞ்சாகும் நிலம் நூல் வெளியீடு கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன் விருத்தி மண்டபத்தில் கடந்த 13 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு காவேரி கலா மன்றத்தின் இயக்குநர் வண.அருட்தந்தை ரி.எஸ்.யோசுவா தலைமையில் நடைபெற்றது.

வாழ்த்துரையினை, யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தியும், வரவேற்புரையினை ஆசிரியர் ப.தயாளனும், நூல் அறிமுக உரையினை கவிஞர் கருணாகரனும் ஆற்றினார்கள்.

நூலினை நூலாசிரியரின் பெற்றோர்கள் வெளியிட்டு வைக்க சமூக சேவையாளரும் தொழிலதிபருமான ந.சிவகுமார் பெற்றுக்கொண்டார்.

யாழ் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் ஆகியோர் நூல் ஆய்வுரையினை வழங்கினார்கள். நிறைவாக நூலாசிரியர் மு.தமிழ்ச்செல்வனின் ஏற்புரை மற்றும் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.






# மலரன்னையில் அமுத விழாவும் நூல் வெளியீடும்




ஜீவநதி ஏற்பாடு செய்த மலரன்னையில் அமுதவிழாவும் நூல் வெளியீடும் கடந்த 8 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருமதி கோகிலா மகேந்திரனின் தலைமையில் திருநெல்வேலி ராஜா கிறீம் கவுஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

இரா.குலசிங்கம் வரவேற்புரையையும், புலோலியூர் வேல்.நந்தகுமார் வெளியீட்டுரையையும், திருமதி.பொ.பிரேமினி தாட்சாயணி, த.அஜந்தகுமார் சிறப்புரையையும் ஆற்றினர். நூல் பற்றிய கருத்துரையை ந.மயூரரூபன் நிகழ்த்தினார்.

# இரு மலர்கள்

தொடர்கதை

**என்ன அதிர்ச்சி?**

எல்லோரும் விமான நிலையத்தை அடைந்து பிரிவுத் துயரோடு நின்றிருந்தார்கள். அருண்யா ஸாமின் கைப்பிடி விடவில்லை. அவனும் அவளை அணைத்தவாறே மற்றவர்களோடு பேசிக் கொண்டிருந்தான்.

இவர்கள் பேச்சுக்கு காது கொடுத்தவளாக நள்ளிரவிலும் பகல் போல நிறைந்து வழிந்த சனசஞ்சாரத்தை ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள். அங்குமிங்கும் எழுமாற்றாகக் கண்களை சுழல விட்டவளின் கண்களில் அந்த உருவம் பட்டு விட்டது.

யார் கையைப் பிடித்துக் கதைக்கிறாள், பார்க்க பிச்சைக்காரன் நல்ல உடை அணிந்த தோற்றத்தில் இருக்கும் இந்த தாடிக்காரன் யாராக இருக்கும் என்று மண்டை காய்ந்து கொண்டிருந்தார்கள்.

தூரத்தில் இவர்களை நோக்கி யாதவ் ஓடி வரும் போதே கவியின் உள்ளுணர்வு ஏதோ சொல்ல அவள் உள்ளத்தில் இனம் புரியாத படபடப்பு. அவன் கிட்ட நெருங்கவும் அவனைக் கண்டு கொண்டவள் “யாது...” என அழுது கொண்டே அவனை ஓடிச் சென்று அணைத்துக் கொண்டாள்.

ஸாமுடைய விமானத்துக்குரிய அறிவிப்பு வரவே எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு அவன் புறப்பட்டான். சோக கீதம் வாசித்துக் கொண்டிருந்த அருணியும் இப்போது ஸாம் போகிறானே என்ற கவலையில் இருந்தாலும் யாதவ் வந்து விட்ட மகிழ்ச்சியில் முகம் விகசிக்க நின்றாள்.

சுந்தரலிங்கம் தம்பதிக்கும் ஸாமின் நண்பர்களுக்கும் யாதவ் வந்துவிட்ட விடயத்தை தெரிவித்து விட்டு உடனேயே யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

சந்திரஹாசன் வண்டியை ஓட்ட அருணி அவர் பக்கத்தில் அமர்ந்திருந்தாள். கவியும் யாதவும் பின்னால் இருந்தார்கள். எல்லோருமே யாதவின் பத்து வருட கதையைக் கேட்க ஆவலாக இருந்தார்கள்.

கவியைத் தன் கைப்பிடியில் வைத்திருந்தவன் மெதுவாக தொண்டையை செருமிக் கொண்டு தன் கதையை ஆரம்பித்தான்.

“என்னை விசாரணை என்று நாலாம் மாடிக்கு கூட்டிக் கொண்டு போய் அடிச்சு உதைச்சாங்க... அதில நிறைய காயம் பட்டு நான் மயங்கிட்டன். அவங்களும் சரியாக கவனிக்காமல் நான் செத்துப் போனன் என்று நினைச்சு குப்பை கொட்டுற இடத்தில கொண்டு போய் வீசிட்டாங்கள்.

அங்க குப்பை பொறுக்க வந்த ஒரு கிழவன் என்னைத் தூக்கிக் கொண்டு போய் கொழும்பு பெரியாஸ்பத்திரில சேர்த்திருக்கு. என்ர நல்ல காலம் அங்க நின்ட ஒரு டொக்டர் என்ர கிளையன்ட். என்னை அடையாளம் கண்டு கொண்டு பொலிஸுக்கு அறிவிக்காமலேயே ரீட்மென்ட் செய்தார்.

நான் சுகமாக ரெண்டு மாசத்துக்கு கிட்ட ஆகிட்டு. அவருக்கு உங்களுக்கு அறிவிக்கப் பயம். நான் உயிரோட இருக்கிறது தெரிஞ்சால் திரும்ப வந்து அவங்கள் கொண்டு போனாலும் என்று.

நான் நினைவு திரும்பி சுகமாகினதும் தொடர்ந்து அங்கேயே இருந்தால் ஆபத்து என்றிட்டுத்தான் என்ர ப்ரண்ட் நலந்தவிடம் சொல்லிட்டு முல்லைத்தீவுக்குப் போனான்.

அங்க போய் முள்ளிவாய்க்காலில ஒரு ரெண்டு கிழமை நிண்டன். பாதையும் பூட்டி சண்டையும் வலுக்க தொடங்கிச்சு. இனியும் அங்க இருக்கச் சரி வராது என்றிட்டு படகால ராமேஸ்வரம் போக வெளிக்கிட்டன்.

நான் கடற்கரைக்குப் போன நேரம் ஒரு படகு அவுஸ்ரேலியாக்கு வெளிக்கிட நானும் அதில ஏறிட்டன். அவுஸ்ரேலியாக்குக் கிட்ட போகேக்க அவுஸ்ரேலியா நேவி சுத்தி வளைச்சு கிறிஸ்மஸ் தீவில கொண்டு போய் முகாமில அடைச்சிட்டாங்க.

அங்க விஸாக்கு பேரெல்லாம் பதிஞ்சு நாலைஞ்சு நாளில சுதந்திரமாக வெளில திரியலாம்... அப்பேக்க உங்களுக்கு போன் பண்ணி விசயத்தைச் சொல்லுவம் என்று ரொம்ப கற்பனையில இருக்கத்தான் என்னைப் பிடிச்ச சனியன் அங்கையும் என்னை விடாமல் தொடர்ந்திச்சு.

என்னோட றூம்ல இருந்த பொடியன் போதைப் பொருள் ஏதோ கடத்தியிருக்கிறான். அவன் என்ர உடுப்புகளுக்கயும் எனக்குத் தெரியாமல் ஒளிச்சு வைச்சு இருந்திருக்கிறான். பொலிஸ் வந்து செக் பண்ணேக்க என்ர உடுப்புக்கயும் இருந்தபடியால் என்னையும் கொண்டே ஜெயிலுக்க போட்டிட்டாங்கள்.

கேஸ் நடந்து பத்து வருசம் கடூழியச் சிறை விதிச்சாங்க. பத்து வருசமும் முடிஞ்சு வெளில வந்த உடன ஜெயிலில வேலை பார்த்து சேர்த்த காசில ரிக்கட்டைப் போட்டுக் கொண்டு ஓடி வாறன்.

வந்து பார்த்தால் நீங்க எல்லாரும் எயார்போட்ல, அதுவும் ஸாமும் கவியும் சிரிச்சுக் கதைச்சுக் கொண்டு நிக்க ஸாம் கவியை கல்யாணம் பண்ணிட்டான் என்று நினைச்சுத்தான் திரும்ப அங்கால போய்ட்டன்.

நல்லகாலம் அருணி ஓடி வந்து என்னைத் தடுத்திட்டா... கடவுள் ஏதோ இப்ப என்றாலும் கண் திறந்து பார்த்திட்டார்...”

கவியைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு கண்ணீர் வழியத் தன் கதையை கூறி முடித்தான். மற்றவர்கள் விழிகளிலும் கண்ணீர் அருவி சொரிந்து கொண்டிருந்தது. அவன் பட்ட கஷ்டங்களை எண்ணி விம்மிக் கொண்டிருந்த கவியை அதுதான் நான் வந்திட்டனே என்று ஆறுதல் படுத்த முனைந்தான்.

பின்னர் இவர்கள் அருண்யாவுக்கு நடந்த கொடுமைகளைக் கூறி இப்போது ஸாம் லண்டனில் இருந்து வந்தது அருண்யாவை மணந்துள்ளது வரை எல்லாம் கூறினார்கள்.

எல்லோர் மனதிலும் இப்போது மகிழ்ச்சி பிரவாகம் மட்டுமே. அதே மகிழ்ச்சியோடு நேராக யாழ்ப்பாணத்தில் யாதவின் வீட்டிற்கே சென்றார்கள்.




✍ யாழ் சத்யா

கவியும் ஸாமும் ஏதோ பேசிச் சிரித்துக் கொண்டிருக்க சந்திரஹாசனும் தலையை அசைத்து ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்.

அந்த உருவம் தூரத்திலிருந்தே இவர்களை நோக்கி வந்து விட்டு கவியும் ஸாமும் சிரிப்பதைப் பார்த்ததும் மிக வேகமாக திரும்பிச் சென்று கொண்டிருந்தது. அது திரும்பச் செல்லும் போதுதான் அருணி கண்டது.

ஸாமின் கையை வேகமாக உதறித் தள்ளி விட்டு அந்த உருவத்தை நோக்கி ஓடினாள். மற்ற மூவரும் இவள் செய்கையால் திகைத்துப் போய் நின்றார்கள் எதுவும் புரியாமல். விரைந்து சென்றவள் அந்த உருவத்தின் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தினாள்.

விரைந்து ஓடி வந்ததில் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க,

“அத்தான்... எதுக்கு இப்ப எங்களைக் கண்டிட்டும் காணாத மாதிரி ஓடுறீங்க?”

“சாரி... நீங்க என்னைத் தப்பா புரிஞ்சு கொண்டிருக்கிறியள் என்று நினைக்கிறன். நீங்க யாரென்றே எனக்குத் தெரியாதே...”

“சும்மா விளையாடிதீங்கோ அத்தான்... தாடி, மீசை வளர்த்தால் ஆள் அடையாளம் மறந்திடுமா? கவிக்கா இன்னும் எவ்வளவு காலம்தான் உங்களையே நினைச்சு ஏங்கிட்டு இருக்கிறதாம்?”

“என்ன சொல்லுறாய் அருணி? அப்ப கவி ஸாமை மரி பண்ணேலயா? அவங்க ரெண்டு பேரும் சிரிச்சுக் கொண்டிருந்ததைப் பார்த்தேனே. இனியும் அவளிட வாழ்வில நான் நிம்மதியை குழப்ப விரும்பேல்ல, அருண்யா என்னை விடு... நான் போறன்...”

அவள் சொன்னதைக் கேட்டதும் தன்னை மீறி தான் யாதவ்மித்ரன்தான் என்பதை வெளிப்படுத்தினான் அவன்.

“ஐயோ அத்தான், நான் கொஞ்சம் சொல்லுறதைக் கேளுங்கோ... ஸாம் ஸேர் என்ர புருஷன் இப்ப... அக்கா இன்னும் உங்களுக்காகத்தான் காத்துக்கொண்டு இருக்கிறா?”

அவள் சொன்னதைக் கேட்டு பூரித்தவன் நம்ப முடியாமல் கண்களில் நீர் வடிய,

“உண்மையாவா சொல்லுறாய் அருண்யா?”

அவள் ஆமாம் என்று சொன்னதுதான் தாமதம். கவியை நோக்கி ஓடத் தொடங்கினார்கள். அங்கே கவி, ஸாம், சந்திரஹாசன் மூவரும் அருணி சந்திரஹாசனும் ஸாமும் நடப்பதை நம்ப முடியாமல் அப்படியே உறைந்து போய் நின்றிருந்தார்கள். மெதுவாக நடந்து வந்து சேர்ந்து கொண்ட அருணியைக் கண்டதும் ஸாம் கேட்டது,

“எப்பிடி அருண் யாதவ் என்று கண்டு பிடிச்சாய்...?”

“நான் சொன்னனேப்பா, கண்டில வைச்சு ஒரு கனவு கண்டனான் என்று. அப்ப அத்தான் இதே சேர்ட்தான் போட்டிருந்தார். நான் பாக்கேக்க இவர் திரும்ப போய்க் கொண்டிருந்தார். எங்க விட்டால் பிடிக்க முடியாம போய்ட்டாலும் ஒருக்கால் யாரென்றாவது பார்ப்பம் என்றுதான் ஓடிப் போய்ப் பார்த்தன்... நீங்க சொன்ன மாதிரி என் கனவு பலிச்சிடுச்சுங்க... உண்மையிலயே அத்தான்தான்...”

இப்போதுதான் சமனிலைக்கு வந்திருந்தார்கள் கவியும் யாதவும். கவி இப்போது அருணியை தாவி இறுக்க கட்டிக் கொண்டவள் விழிகள் ஆறாய் பெருக்கெடுக்க,

“அருண்... நீ பட்ட கஷ்டம் வீண் போகேல்ல... நீயே கடைசில என்ர யாதுவை என்னட்ட திரும்ப சேர்த்திட்டாய்... நான் உனக்கு எப்பிடி நன்றி சொல்லுவேன் அருண்...”

அருணை முத்தமிட்டவாறு தேம்பி அழுதவளை மற்ற மூவரும் விழிகளில் நீர் மல்க பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

**(மலரும்...)**

**திருக்குறளின் காமத்துப்பால் காட்டும், காதல் இலக்கியக் காட்சிகளின் இனிமையைப் பகிர்ந்து கொள்ளும் கட்டுரைத்தொடர்.**

**செந்தமிழ்ச்செல்வர் பாடுமீன் சு.ஶ்ரீகந்தராசா**

ஊடல் உவகை என்ற இந்த அதிகாரத்தின் கருப்பொருளே ஊடலை நினைத்து மகிழ்ச்சியடைவது என்பதுதான். இருவரும் கூடிப் பெறுகின்ற இன்பத்தை அதிகரிக்கச் செய்வது, கூடலுக்கு முன்னரான ஊடல் அல்லவா? அதனால் அந்தக் கூடலை நினைத்தும், அதைப் பற்றிக் கதைத்தும் காதலர்கள் இருவரும் களித்து இன்புறுகின்ற இந்தக் கருப்பொருளைக் காமத்துப் பாலின் இறுதி அதிகாரத்தில் வைத்திருக்கிறார் திருவள்ளுவர்.

இவ்வாறு, காதலர்களுக்கிடையே எழுகின்ற ஊடல், காதல் வேட்கையின் இன்பத்தைக் கூட்டும் வல்லமையுள்ளது என்ற கருத்தை மற்றும் ஒரு கோணத்தில் வெளிப்படுத்துகிறது இந்தக் குறள்.

**"ஊடிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு"** **(குறள் 1328)**

இதன் பொருள்:

அவளின் நெற்றி முழுவதும் வியர்க்கும் அளவுக்கு இருவரும் கூடிப் பெறுகின்ற இன்பத்தை, திரும்பவும் ஒருமுறை ஊடல் கொள்வதன் மூலம் மீண்டும் பெற்றுக்கொள்ளலாம் அல்லவா?

**"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்"** **(குறள் 1330)**

இதன் பொருள்:

காதல் வாழ்விற்கு இன்பம் தருவது ஊடல் ஆகும். அந்த ஊடலுக்கும் பேரின்பம் எதுவென்றால் இருவரும் கூடி உடலுறவில் மகிழ்ச்சியடைவதாகும்.

**முடிவுரை**

காதலையும் வீரத்தையும் பேசுகின்ற தமிழ் இலக்கியத்தின் உச்சத்தில் ஒளிவீசிக்கொண்டிருப்பது திருக்குறளின் காமத்துப்பால். அது புனைவு இலக்கியமல்ல. இன்பமான காதல் வாழ்வுக்கு வழி

# குறள் இன்பம்




**ஒருவர் ஊடினார்! இருவர் கூடினர்!**

அவர்கள் இருவரும் இல்லறத்தில் இணைந்து வாழும் காதலர்கள். அன்றொருநாள் அவளின் ஊடலால் மாலைப் பொழுது முழுவதும் வீணாகிப் போயிற்று. இரவாகும்போது அவளது ஊடல் தணிந்ததும் இருவரும் கூடி மயங்கி, இன்ப வெள்ளத்தில் மூழ்கி எழுந்து, உள்ளத்தில் மலர்ச்சியும், உடலில் தளர்ச்சியுமாகக் களித்துயிலில் கிடந்தார்கள். அப்போது அவளுக்கு மட்டும் கேட்கும் படியாக, அவளின் காதருகே அவன் மெல்லப் பேசினான்.

"இப்படிக் கண்ணை மூடிக்கொண்டு, என்னைத் தழுவிக்கொண்டு நீ இருக்கும் சுகம் என்னைச் சொர்க்கத்திற்கே கொண்டுபோகிறதே! இந்த இன்ப மகிழ்ச்சியை நாம் அடைவதற்குக் காரணம், நீ என்னுடன் ஊடல் கொண்டு இருந்ததுதான் அல்லவா?" என்று உருகினான் அவன்.

"நான் ஊடல் கொண்டதாலா? நான் ஊடல் கொண்டபோது நீங்கள் என்மேல் கோபப்பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்? அப்படிச் செய்யாமல், என் ஊடலைத் தணிக்க என்னென்னவெல்லாமோ செய்து என்னை மகிழ்வித்ததால் அல்லவா நாம் இவ்வளவு மகிழ்ச்சியடைகிறோம்?" என்று முனகினாள் அவள்.

"அதுவும் சரிதான், ஆனால் உன்னோடு நான் எப்படிக் கோபிக்க முடியும்? என்னுடன் நீ கோபப்படும் போதும் உன் முகம் மிகவும் அழகாக இருப்பதை இரசித்துக்கொண்டிருந்த எனக்கு, உன்மேல் கோபம் எப்படி வரும்?" என்று கூறியபடியே அவளின் அழகிய முகத்தைத் தன் கைகளில் தாங்கினான். அப்போது அவளின் நெற்றியிலே முத்து முத்தாக வியர்த்திருப்பதைக் கண்டான். என்ன இது இப்படி வியர்க்கிறதே என்று அந்த வியர்வைத் துளிகளைத் தன் விரல்களால் தொட்டுப் பார்க்க முயன்றான். அவளோ தாங்க முடியாத நாணத்தால் அவனின் மார்பிலே முகம் புதைத்தாள். அவளின் நெற்றி வியர்வையினால், அவனின் மார்புக்குழி ஈரமானது. அப்படியே அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

இப்போது இருவரும் பேச்சை மறந்து நேரம் போவது தெரியாமல் தழுவிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில், அவனது மனதிலே ஓர் ஆசை பிறக்கிறது. "ஆகா! இப்படி இவளின் நெற்றி முழுவதும் வியர்த்துக் கொட்டுகின்ற அளவுக்கு, இவளோடு சேர்ந்து இன்ப சுகத்தில் இரண்டறக் கலந்திருக்கிறேன். இவள் என்னோடு ஊடல் கொண்டதால் அல்லவா இந்த அற்புதமான இனிமையை நுகர்ந்து மகிழ்ந்தோம். அப்படியானால், அவளோ நானோ இன்னும் ஒருதடவை ஊடல் கொண்டால், மீண்டும் அந்த உச்ச இன்பத்தைப் பெறுவோம் அல்லவா?" என்று மனதிற்குள் தன்னைத் தானே கேட்டுக் கொள்கிறான்.

இனியென்ன நடக்கும்? அவளை ஊடலுக்குத் தூண்டுவான். அல்லது அவனே ஏதாவது பொய்யான காரணம் ஒன்றைக்கூறிப் போலியாக அவளுடன் கோபித்து - ஊடல் கொண்டு, பகல் முழுவதும் சண்டை பிடிக்கப் போகிறான். இறுதியில் சட்டென்று சமாதானமாகி, ஊடலைத் துறந்து, கூடலில் கலந்து, இன்பத்தில் மிதந்து.....!

**ஊடுவோமா மீண்டும் கூடுவோமா?**

ஊடலின் முடிவில், அதன் விளைவாக நள்ளிரவு நேரத்தில் நடந்த கூடலின் இணையில்லா இன்பத்தை அனுபவித்த மகிழ்ச்சியிலும், பெருமிதத்திலும் அவனின் இதயத்தில் எண்ண அலைகள் கரைபுரண்டு ஓடுகின்றன. தான் அனுபவித்த இன்பம் இன்னும் இன்னும் வேண்டும் என்ற ஆசை அவனைத் தூண்டுகின்றது. நள்ளிரவு தாண்டிக் கொண்டிருக்கிறது. இன்னும் சிலமணி நேரங்களில் பொழுது புலர்ந்துவிடுமே என்ற கவலை அவனுக்கு வருகிறது. அதனால் அந்த இரவு நீடிக்க வேண்டும் என்று அவனது உள்ளம் வேண்டுகின்றது. தன் காதலி ஏதாவது காரணம் சொல்லி, மீண்டும் தன்னுடன் ஊடல் கொள்ள வேண்டும் என்று அவன் விரும்புகிறான். அதனால் தன்னுடன் ஊடல் கொள்ள வைப்பதற்காக அவளைச் சீண்டிவிட அவன் ஆயத்தமாகிறான். அப்படி அவள் திரும்பவும் ஊடல் கொண்டுவிட்டால், பின்னர் அவளை அமைதிப்படுத்தி, ஊடலைத் தணிக்க முயலவேண்டும். இறுதியில் இருவரும் நீண்டநேரம் கூடி இன்பத்தில் திளைக்க வேண்டும் இவையெல்லாம் எண்ணியபடி நடப்பதற்கு இந்த இரவுப்பொழுது நீண்டு கொண்டே போக வேண்டும், விரைவில் விடிந்து விடக் கூடாது என்று ஆசைப்படுகிறான்.

ஒரு காதலனின் இத்தகைய இரம்மியமான காதல் உணர்வை எடுத்துக் கூறுகின்றது இந்தக் குறள்.

**"ஊடுக மன்னோ ஒளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ இரா"** **(குறள் 1329)**

இதன் பொருள்:

ஒளிவீசும் அணிகலங்களை அணிந்துள்ள என் காதலி என்னுடன் இன்னும் ஊட வேண்டும். அவளது ஊடலைத் தணிப்பதற்காக நான் அவளை இரந்து கேட்டு அவளுடன் கூடுவதற்கு ஏற்றவாறு இரவுப்பொழுது நீடிக்க வேண்டும்.

**ஊடினால் இன்பம்! கூடினால் பேரின்பம்!**

இல்லற வாழ்விலே, உடல் உறவு என்பது இன்றியமையாதது. சிற்றின்பம் என்று அது சொல்லப்பட்டாலும் இவ்வுலகப் பேரின்பம் அதுதான். களவியலாக இருந்தாலும், கற்பியலாக இருந்தாலும் ஓர் ஆணும் பெண்ணும் கூடிவாழும் வாழ்க்கையில் அந்த இன்பத்தின் முழுமையான மகிழ்ச்சியை அடைவதற்கு அவர்களிடையே ஏற்படும் சின்னச் சின்ன சண்டைகளும், விவாதங்களும், கோபங்களும், மனக் குமுறல்களும் வழியேற்படுத்திக் கொடுக்கின்றன என்பது காதல் வாழ்வின் தனித்துவச் சிறப்பாகும். இவற்றையே ஊடல் என்று சொல்கின்றோம். இந்த ஊடல் உண்மையான காரணங்களாலும் எழலாம். காதல் வேட்கையால் பொய்யாகவும் ஏற்படுத்தப்படலாம். எவ்வாறாயினும், காதலர்களுக்கிடையிலான ஊடல் என்பது, அவர்களது காதல் வாழ்க்கையில் அன்பை அதிகரிக்கும். உடல் கலந்து பெறுகின்ற இன்பத்தைக் கூட்டும். உள்ளத்தில் நிறைவான மகிழ்ச்சியைக் கொடுக்கும். இந்த அற்புதமான உணர்வு மனித குலத்திற்கு மட்டுமன்றி, எல்லா உயிரினங்களுக்கும் பொதுவானது.

காட்டும் எழிலான இலக்கியம். இதயங்களின் ஈர்ப்பினால் ஒன்றுபட்ட ஆணும் பெண்ணும், இசைவு கொண்டு சேரும் வாழ்க்கை முறையை எடுத்துக் கூறும் இயற்கையோடிணைந்த நெறிமுறைகளை எடுத்துக்காட்டும் அறிவியல் இலக்கியம். அதே வேளை முறையற்ற தொடர்புகளையும், ஒழுக்கத்திற்கு ஒவ்வாத உறவுகளையும் புறத்தொதுக்கி, இயல்பான காதல் வழிகளையும், கற்பு நெறிகளையும் கொண்ட மனித குலத்தின் மகிழ்ச்சியான வாழ்க்கை முறைகளை அழகாகச் சித்தரிக்கும் அற்புதமான இலக்கியம்.

திருக்குறளின் அறத்துப்பாலையும், பொருட்பாலையும் படித்தும் பேசியும், வாழ்வில் கலந்துரையாடுகின்ற அளவுக்கு, காமத்துப்பாலை அறிஞர்களோ, தமிழ் ஆர்வலர்களோ பயன்படுத்துவதில்லை. 'காமம்' என்ற பெயர் அதற்குக் காரணமாக இருக்கிறதோ தெரியவில்லை. பண்டைக்காலத்தில் காமம் என்ற சொல் 'காதல்' என்ற கருத்திலேயே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

காமம் இல்லையென்றால் இந்த உலகம் இல்லை. உலகத்தின் உயிரினங்கள் தோற்றம் இல்லை. மனித குலத்தைப் பொறுத்தவரையில் தோன்றிய காலம் தொட்டு, மனிதனின் நாகரிக வளர்ச்சியின் ஒவ்வொரு அணுவையும் செதுக்கியது காமவுணர்வே என்று கூறலாம். எனவே அந்தப் புனிதமான உணர்வை, அதன் சிறப்பை, அதன் முக்கியத்துவத்தை, வாழ்வில் அதன் இன்றியமையாத தன்மையை வண்ணப்படமாக நம்மனதில் பதியவைத்து, நல்லறமான இல்லறத்தின் காதல் வாழ்வுக்கு வழிகாட்டும் திருக்குறளின் காமத்துப் பால் வள்ளுவப் பெருந்தகை இவ்வுலகுக்கு வழங்கிய மாபெரும் சொத்து ஆகும். அதைப் படிப்பதும், படித்துச் சுவைப்பதும், அதுபற்றிப் பேசுவதும், அதன்வழி நடப்பதும் மனித குலத்திற்கு இன்பமும் மகிழ்ச்சியும் நிறைந்த முறையான காதல் வாழ்வுக்கு வழிகாட்டும்.

**(இத்துடன் குறள் இன்பம் கட்டுரைத்தொடர் முற்றுப்பெறுகிறது)**

# தமிழரசுக் கட்சி தலைமைக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதற்கமைய யாழில் 15 கிளை, மட்டக்களப்பில் 10 கிளைகள், அம்பாறையில் 07, திருகோணமலையில் 06, வவுனியாவில் 04, முல்லைத்தீவு மற்றும் மன்னாரில் தலா 05 கிளைகளுடன் கிளிநொச்சியில் 4 கிளைகளும் கொழும்பில் ஒரு கிளையும் என்ற அடிப்படையிலேயே இந்த 57 கிளைகள் உள்ளன.

அவ்வகையில் மாவட்டரீதியில் வாக்களிக்கத் தகுதிபெற்றவர்களாக யாழில் 94 பேரும், மட்டக்களப்பில் 60, அம்பாறை 38, திருகோணமலை 37, வவுனியா 23, கிளிநொச்சி 23, மன்னார் 27, முல்லைத்தீவில் 28 பேருக்கும் வாக்குரிமையுள்ள அதேநேரம் கொழும்பில் 08 பேருக்கும் வாக்குரிமை உள்ளது.

இவ்வாறு இந்த 343 பேரும் வாக்களித்து தேர்வு செய்யவுள்ள தலைவரை அந்தக் கட்சியின் தொண்டர்கள், ஆதரவாளர்கள், வாக்காளர்களிற்கு அப்பால் இராஜதந்திரிகளுடன் தமிழரசுக் கட்சியை சிதைக்க வேண்டும் அல்லது அழிக்க வேண்டும் எனத் துடிப்பவர்கள்கூட அக்கறையாக காத்திருக்கின்ற நிலையிலேயே போட்டியிடும் 3 வேட்பாளர்களில் ஒருவர் அதிக அக்கறை காட்டவில்லை. ஏனைய இருவரும் அதில் சளைத்தவர்கள் அல்லர்.

அவர்கள் தமக்குத் தெரிந்த இராஜதந்திர மதிநுட்பங்களைப் பயன்படுத்துகின்றனர். இவற்றின் மத்தியில் 21 ஆம் திகதி காலை 10 மணிக்கு கூடும் கூட்டத்தைத் தொடர்ந்து தேர்விற்கான வாக்களிப்பும் இடம்பெற்று பிற்பகல் 2 மணியளவில் முடிவு அறிவிக்கப்படும்.

தமிழரசுக் கட்சி, அகில இலங்கை காங்கிரஸ் கட்சி ஆகிய இரண்டு கட்சிகள் மட்டுமே வடக்கு, கிழக்கில் கோலோச்சின. இன்று பல கட்சிகள் மழைக்கு முளைத்த காளான் போல் பெருகி விட்டன

ஆயுதம் ஏந்தி போராடியவர்கள் கட்சிகளை உருவாக்கி அரசியல் நீரோட்டத்தில் இணைந்து விட்டனர். கட்சியுடன் முரண்பட்டவர்கள் தனியாகக் கட்சிகளை உருவாக்கி உள்ளனர். அப்படியான அரசியல் கட்சிகளுடன் ஒப்பிடும் போது தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் தேர்தல் தனித்துவமானதுதான். அதேவேளை சக அரசியல்வாதிக்கு தலைமைப் பதவியை விட்டுக் கொடுக்காமல் போட்டியிடுவது சரிதானா? என்ற வினாவும் எழுந்துள்ளது.

தலைமைப் பதவி பெருமையானதுதான். அதன் பின்னால் உள்ள அரசியல் அதிரடிகள் சாமாயமானதல்ல. ■

# சர்வதேச நீதிமன்ற விவகாரம்...

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையைப் பொறுத்தவரை தற்போதைக்குச் சீனாவை ஓரளவுக்குத் தூரத் தள்ளிவைப்பது போன்றதொரு தோற்றத்தைக் காண்பித்தாலும், சீனாவுக்குத் தாக்கம் எழாத முறையில் அமெரிக்க - இந்திய அரசுகளை இலங்கை அரவணைத்துக் கொண்டிருக்கிறது.

அதற்கான காரண - காரியம் என்பது குழம்பியுள்ள உலக அரசியல் ஒழுங்கு நிலைமைக்குள் கனடா ஊடாக வேறு சிறிய நாடுகளை புலம்பெயர் தமிழர்கள் நாடிவிடக் கூடும் என்ற அச்சமே. இலங்கையும் முற்று முழுதாகச் சீனாவின் பக்கம் செல்வதைத் தடுக்கும் நோக்கிலேயே ஈழத் தமிழர்களுக்கு நடந்தது இன அழிப்பு என்பதைக் கனடாவின் பிரதான அரசியல் கட்சிகள் மூலமாக அமெரிக்கா சொல்ல வைக்கிறது என்ற அவதானிப்புகளும் இல்லாமலில்லை.

அதேநேரம் காம்பியா என்ற ஆபிரிக்காவின் சிறிய நாடு ஒன்றுதான் ரோஹின்கிய முஸ்லிம் மக்களுக்கு நடப்பது இனஅழிப்பு என்று சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கிறது. இதனை பிரித்தானியா முழுமையாக ஆதரித்து வருகின்றது.

ஆகவே இவ்வாறான ஒரு பின்னணி புலம்பெயர் அமைப்புகளுக்கு வந்துவிடும் என்ற அச்சம் மற்றும் எதிர்வுகூறல் இலங்கைக்கு உண்டு. இதற்கு ஏற்ப பல அரசியல் நிகழ்ச்சி நிரல்கள் இலங்கைத் தீவுக்குள்ளும் வெளியுலகத்திலும் ஆரம்பிக்கப்பட்டு அரங்கேறி வருகின்றன.

இலங்கையின் இத்திட்டத்திற்கு ஜேர்மன், சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளும் ஒத்துழைக்கின்றன.

ஆனால் தமிழ்த்தரப்பில் இந்த உத்திகள் எதுவுமே இல்லை. தமிழரசுக் கட்சியின் தலைவர் போட்டி, ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளரை நிறுத்துவது மற்றும் போலித் துவாரகா பற்றிய ஆய்வுகளையே தமிழ்த்தரப்பு செய்து கொண்டிருக்கிறது. பல தமிழ் ஊடகங்களும் இதற்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுக்கின்றன.

குறைந்தபட்சம் தென்னாபிரிக்க அரசைப் பாராட்டி ஜனாதிபதி சிறில் ரமபோசாவுக்கு தமிழ்த்தேசியக் கட்சிகள் கடிதம் எழுதியிருக்கலாம். இன அழிப்பு என்று கூறிவரும் கனடாவின் இரண்டு பெரிய அரசியல் கட்சிகளான கொன்சர்வேற்றிவ், லிபரல் கட்சி ஆகியவற்றின் தலைவர்களுக்குக் கடிதத்தின் மூலம் பாராட்டியிருக்கலாம்.

ஆகவே அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாகவும் இந்தியாவின் வஞ்சக அரசியல் செயற்பாட்டுக்குள்ளும் தமிழ்த்தேசியக் கட்சிகள் முடங்கியுள்ளன என்பதையே இது பகிரங்கப்படுத்துகின்றது.

2006 இல் விடுதலைப் புலிகளைத் தடை செய்த கொன்சர்வேற்றிவ் கட்சி ஈழத்தமிழர்களுக்கு நடந்தது இன அழிப்புத்தான் என்று கூறுவதுடன், பதவிக்கு வந்தால் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆகவே பாலஸ்தீன மக்களை ஆதரிப்பதாகக் காண்பித்துக் கொண்டு இஸ்ரேல் அரசின் பக்கம் இலங்கை நிற்பது போன்று அமெரிக்க இந்திய அரசுகளுக்கு இரட்டை வேடம் போடுகின்றது. ஆனால் அரசு அற்ற சமூகமாகக் கடந்த எண்பது வருடங்கள் அரசியல் போராட்டம் நடத்தி வரும் ஈழத்தமிழ்த் தரப்பு, 2009 மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் ஏன் அமெரிக்க - இந்திய அரசுகளுக்கு மாத்திரம் விசுவாசமாக இருக்கின்றன?

2014 வரையும் தென்னாபிரிக்க அரசு ஈழத்தமிழர் பக்கம் நின்றது. ஆனால் அதனைத் தமிழர் தரப்பு உரிய முறையில் கையாளவில்லை. பிரதிநிதி ஜனாதிபதியாக இருந்த சிறில் ரமபோசா 2020 இல் தென்னாபிரிக்க ஜனாதிபதியாக வரக்கூடும் என்று கணித்து அப்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ சிறில் ரமபோசவை இலங்கைக்குப் பல தடவைகள் அழைத்துப் பேசியிருக்கிறார்.

ஈழத்தமிழர் பிரச்சினை 2009 இல் முடிவடைந்துவிட்டது என்றும் இலங்கையில் இன நல்லிணக்கமே அவசியம் என்றும் போதித்திருக்கிறார். இன்று இமாலயப் பிரகடனத்துக்கு தென்னாபிரிக்கா முழு ஆதரவு வழங்குவதுடன் ஈழத்தமிழர்கள் இலங்கையர்களாக வாழ முடியும் என்றும் கூற ஆரம்பித்துள்ளது. ஆகவே உலக அரசியல் விவகாரங்களை அறிந்து நுட்பமாகக் கையாள்வதற்குரிய புதிய இளம் தலைமை ஒன்று ஆங்கில அறிவுடன் உருவாக வேண்டும்.

இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் வல்லரசாகத் தன்னைக் காண்பிக்க முற்படும் இந்தியா, சர்வதேச விவகாரங்களில் இரட்டை வெளியுறவுக் கொள்கைகளோடு எவ்வாறு பயணிக்கிறது என்பதற்கும், சிறிய நாடான இலங்கை ஈழத்தமிழர் விவகாரத்தைச் சர்வதேச அரங்கில் இருந்து முற்றாக நீக்கம் செய்ய, மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளையும் இந்தியாவையும் அதேநேரம் பொருளாதார உதவிகளைப் பெற சீனாவையும் எவ்வாறு நுட்பமாகக் கையாள்கின்றது என்பதற்கும் கண்முன்னே பல உதாரணங்கள், படிப்பினைகள் உண்டு.

சர்வதேச நீதி என்பது உலக நாடுகளின் புவிசார் அரசியல் நலன்களில் தங்கியுள்ளது. ரோஹிகின்ய முஸ்லிம்களுக்கு நடப்பது இன அழிப்பு என்பதை ஏற்றுக்கொள்ளும் பிரித்தானியா, காஸாவில் நடப்பது இன அழிப்பு என்பதை ஏற்கத் தயங்கும் காரணம் என்ன என்பதைப் புரிந்துகொண்டு சர்வதேச அரசியலை இலங்கை நன்கு கையாளுகின்றது, காய் நகர்த்துகின்றது. ■

ஆனால் தமிழ்த்தரப்பு?

**கூர்மை**

# பரிஸ் 2024 தொடக்க விழாவில் இஸ்ரேல் பங்குபற்றும்



பாதுகாப்பு கவலைகள், தாக்குதல்களுக்கான சாத்தியக்கூறுகள் இருந்தபோதிலும் பரிஸ் 2024 ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்க விழாவில் இஸ்ரேல் பங்கேற்பதை உறுதிப்படுத்தியுள்ளது. மற்ற தூதுக்குழுக்களைப் போலவே இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களும் ஒலிம்பிக் கிராமத்தில் தங்க வைக்கப்படுவார்கள் என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

எந்தவொரு சர்வதேச விளையாட்டு நிகழ்விலும் பாதுகாப்பு மிக முக்கியமானது, குறிப்பாக ஒலிம்பிக் போட்டிகளின் சூழலில், இது உலகெங்கிலும் நடைபெற்று வரும் பல்வேறு புவிசார் அரசியல், மத, வரலாற்று மோதல்களுக்கு மத்தியில் நடைபெறும். முந்தைய 32 பதிப்புகளில் இருந்ததைப் போல, ஒரு குறிப்பிட்ட அரங்கம் போன்ற ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வெளியே தொடக்க விழாவை நடத்துவதற்கான முடிவு, பாதுகாப்பை ஒரு சவாலான மாநில பிரச்சினையாக ஆக்குகிறது.

ஒரு மைதானம் அல்லது வரையறுக்கப்பட்ட சுற்றளவைப் பாதுகாப்பது என்பது பாரிஸ் போன்ற ஒரு மெகா நகரத்தின் இதயத்தின் வழியாக ஆறு கிலோமீற்றர் பாதையை நிலத்திலும் நீரிலும் பாதுகாப்பதற்கு சமமானதல்ல. விழாவின் இறுதிக் கூறுகள் மற்றும் நிகழ்ச்சிகள் நடைபெறும் ட்ரோகாடெரோவை அடைய சுமார் 10,500 பேர் இந்தப் பாதையில் பயணிப்பார்கள்.

இந்த காரணிகள் அனைத்தும் பரிஸ் 2024 எதிர்கொள்ளும் பாதுகாப்பு சவால்களுக்கு பங்களிக்கின்றன, இது பார்வையாளர்களின் எண்ணிக்கையை அசல் திட்டத்தில் பாதியாக குறைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது (மேலும் குறைக்கப்படலாம்). பாதுகாப்புக் கவலைகள் இருந்தபோதிலும், பரிஸ் 2024 ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்க விழாவில் இஸ்ரேலிய விளையாட்டு வீரர்கள் பங்கேற்பார்கள் என்று இஸ்ரேலிய ஒலிம்பிக் கமிட்டியின் தலைவர் தெரிவித்தார்.

ஒலிம்பிக் வரலாற்றில் சோகமான அத்தியாயங்களில் ஒன்று ஜேர்மனியில் செப்ரெம்பர் 5,1972 அன்று, 1972 மியூனிக் ஒலிம்பிக் போட்டிகளின் இரண்டாவது வாரத்தில் நடந்தது. பாலஸ்தீன பயங்கரவாதக் குழுவான 'பிளாக் செப்ரெம்பர்' கமாண்டோ, இஸ்ரேலிய ஒலிம்பிக் குழுவைச் சேர்ந்த 11 பேரையும் ஒரு பொலிஸ்காரரையும் கடத்திச் சென்று கொலை செய்தனர். ■

# உலகக்கிண்ணப் போட்டிக்காக சவூதியில் ஹைடெக் ஸ்டேடியம்



2034ஆம் ஆண்டு உலக உதைபந்தாட்டப் போட்டியை நடத்தும் சவூதி அரேபியா ரியாத் அருகே 200 மீற்றர் உயரமான குன்றின் மேல் 45,000 இருக்கைகள் கொண்ட ஹைடெக் ஸ்டேடியத்திற்கான வடிவமைப்புகளை வெளியிட்டது.

அடுத்த தசாப்தத்தில் உலக விளையாட்டுகளில் முக்கிய நாடாக மாற விரும்பும் எண்ணெய் வளம் மிக்க இராச்சியத்தின் பட்டத்து இளவரசருக்காக இளவரசர் முகமது பின் சல்மான் ஸ்டேடியம் என்று அதற்குப் பெயரிடப்படும். இந்த வடிவமைப்பில் உள்ளிழுக்கும் கூரை, நூற்றுக்கணக்கான மீற்றர் திரைகள் கொண்ட LED சுவரும் ரசிகர்களுக்கு அதிவேக அனுபவத்தை உருவாக்குகிறது என்று கிடியா முதலீட்டு நிறுவனம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. சவூதியின் தலைநகரான ரியாத்தி லிருந்து 45 கி.மீ (30 மைல்) தொலைவில் பொழுதுபோக்கு, கேமிங் மற்றும் விளையாட்டு மையத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட கிடியா நகரத் திட்டத்தின் மையப் பகுதியாக இந்த மைதானம் உள்ளது. LED சுவர் கீழே நகரத்தின் காட்சிகளை திறக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

புதிய ஸ்டேடியம் அல்-நாஸ்ர் , அல்-ஹிலால் ஆகிய ரியாத் கிளப்புகளின் சொந்த மைதானமாக மாறும். கடந்த ஆண்டு முறையே கிறிஸ்டியானோ ரொனால்டோ, நெய்மரை அந்த அணிகள் ஒப்பந்தம் செய்தன.

48 அணிகள் பங்கேற்கும் போட்டிக்கு 14 மைதானங்கள் தேவை என்று பீபா ஏல ஆவணங்கள் கூறுகின்றன. எதிர்காலத்திற்கான புதிய நகரமான நியோம் உலகக் கோப்பை திட்டத்தில் இருக்க வாய்ப்புள்ளது. ■

# வாடகை உபகரணங்களில் உலகக்கின்னப் போட்டி




அமெரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள் இணைந்து ரி20 உலகக்கிண்ணப் போட்டியை ஜூன் மாதம் நடத்துகின்றன. கிரிக்கெட் போட்டியை நடத்துவதற்குரிய சகல வசதிகளும் மேற்கு இந்தியாவில் உள்ளன.

ரி20 உலகக்கிண்ணப் போட்டியை நடத்த அமெரிக்கா தற்காலிக தயாரிப்புகளை செய்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. அதில் ஆடுகளம் மெல்போர்னில் இருந்து கொண்டு வரப்படும் என்றும், பார்வையாளருக்கான நாற்காலிகள் லாஸ் வேகாஸிலிருந்து கொண்டு வரப்படும் என்றும் கூறப்படுகிறது.

இந்தியா, பாகிஸ்தான் அணிகள் ஜூன் 9 ஆம் திகதி நியூயோர்க்கிலுள்ள நாசாவ் கவுண்டி ஸ்டேடியத்தில் மோதுகிறது. இதற்காக 34,000 பார்வையாளர்கள் அமரக்கூடிய தற்காலிக பார்வையாளர் மண்டபம் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு பிறகு அகற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது இங்கிலாந்தின் மைதானங்கள், மும்பையின் சின்னமான வான்கடே ஸ்டேடியம் உட்பட உலகெங்கிலும் உள்ள பல புகழ்பெற்ற கிரிக்கெட் ஸ்டேடியங்களை விஞ்சும் திறன் கொண்டதாக இருக்கும்.

மன்ஹாட்டனில் இருந்து கிழக்கே 25 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள நாசாவ் கவுண்டி மைதானத்தை ஒரு வரலாற்று கிரிக்கெட் நிகழ்வின் மையமாக நிலைநிறுத்துகிறது. எந்தவொரு கிரிக்கெட் போட்டியின் முக்கிய அங்கமான ஆடுகளம் சிறப்பு கவனம் பெறுகிறது. இதையடுத்து, அடிலெய்டு ஓவலின் கியூரேட்டரான டேமியன் ஹூக், டிராப்-இன் பிட்ச்களை வடிவமைக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அடிலெய்டு ஓவல் கியூரேட்டர் டேமியன் ஹூக் தயாரித்த ரி20 உலகக் கோப்பையில் அமெரிக்காவில் விளையாடுவதற்கு ட்ராப்-இன் பிட்ச்கள் பயன்படுத்தப்பட இருக்கிறது. ட்ராப்-இன் பிட்ச்கள் என்பது ஏதோ ஒரு மைதானத்திலிருந்து உருவாக்கப்பட்ட பிட்சை, உடைத்து எடுத்து கொண்டு வந்து மற்றொரு மைதானத்தில் பொறுத்தப்பட்டு விளையாடப்படும்.

ஐ.சி.சி நிகழ்வுகள் இயக்குநர் கிறிஸ் டெட்லி இதுகுறித்து கூறுகையில், "ஏற்கெனவே கட்டமைக்கப்பட்ட ட்ராப்-இன் பிட்ச்களை நாங்கள் பயன்படுத்த இருக்கிறோம். இந்த விடயத்தில் நிபுணரான அடிலெய்டு ஓவல் கியூரேட்டர் டேமியன் ஹூக் அவர்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்த இருக்கிறோம். அவர் டிரேக்களை உருவாக்கி பராமரித்து வருகிறார். அவைகள் புளோரிடாவில் உள்ளன. அவை மைதானங்களில் பொருத்தப்பட்டு பயிற்சி போட்டிகள் நடத்தப்பட்டு பிட்சி எப்படி உள்ளது என்று ஆய்வு நடத்தப்படும். போட்டிகள் விளையாடப்படும் பிட்சுகள் புத்தம் புதியது. இது தவிர, மழை பெய்தால் தண்ணீரை வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகளையும் செய்து வருகிறோம். " மற்ற நாடுகளில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளை போன்று அமெரிக்காவிலும் அனைத்து உள்கட்டமைப்புகளும் தற்காலிகமானதாக இருக்கும். சில கட்டமைப்புகளின் உபகரணங்கள் லாஸ் வேகாஸிலிருந்து கொண்டு வரப்படும். அவை அமைக்கப்பட்டு போட்டிக்குப் பிறகு அகற்றப்படும். அங்கு அமெரிக்காவில் 30 மில்லியன் கிரிக்கெட் ரசிகர்கள் உள்ளனர். கட்டமைப்புகளின் கட்டுமானம் பெப்ரவரியில் இருந்து தொடங்கும் மற்றும் மே மாதத்திற்குள் அவற்றின் பணிகள் நிறைவடையும்." என்று தெரிவித்தார். ■

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 20.01.2024 அன்று வெளியிடப்பட்டது.